# களனி

"இலக்கியத்தின் நலிவு
தேசத்தின் நலிவு
வீழ்ச்சியில் இரண்டும்
இணைந்தே இருக்கும்"

கலை - இலக்கியம் - அறிவு

ஐப்பசி - மார்கழி 1973

75 சதம்

With the Best Compliments

of

# D. K. SUBRAMANIAM

*General Maneger*

*Paranthan Chemical Corporation*

PARANTHAN




தரம் மிக்க போட்டோக்களுக்கு

# தரன்

## ஸ்ருடியோ

9, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்

வடமாகாணத்தில்
"சில்க் ஸ்கிறீன்"
போஸ்ரர் அச்சிடுபவர்கள்.

மற்றும்

★ மூவிங் சிலேட்ஸ்
★ றபர் சில்
★ லேபல் டிசைன்ஸ்
★ புளொக்ஸ் தயாரிப்பாளர்கள்

# தரன் ஸ்ருடியோ

9, நவீன சந்தை [மேல்மாடி] யாழ்ப்பாணம்

---

களனிக்கு எமது வாழ்த்துக்கள்!

விவசாயிகளுக்குத் தேவையான

★ உரக்கலவைகள்
★ கிருமிநாசினி வகைகள்
★ தெளி கருவி

என்பனவற்றுக்கு தொடர்புகொள்ளுங்கள்:

# நாதன் ஸ்ரோர்ஸ்

விசுவமடு : பரந்தன்

சகல விதமான

★ றேடியோக்களும்

★ மணிக்கூடுகளும்

குறைந்த செலவில் திருத்துவதற்கு சிறந்த ஸ்தாபனம்

# றேடியோஸ் பதி

**40, கஸ்தூரியார் வீதி : யாழ்ப்பாணம்**

( திருத்தம் செய்யும் சகல பொருட்களுக்கும்
ஒரு வருடகால உத்தரவாதம் உண்டு. )

---

**களனிக்கு எமது நல்வாழ்த்துக்கள்!**

**சாள்ஸ் டீ லக்ஸ்**

சுத்தமான — சுவையான

★ உணவுவகைகளுக்கு

★ சிற்றுண்டிவகைகளுக்கு

★ குளிர்பானங்களுக்கு

விஜயம் செய்யுங்கள்

# சாள்ஸ் டீ லக்ஸ்

உரிமையாளர்: பி. ஈ சாள்ஸ்

சுண்டிக்குளம் சந்தி

விசுவமடு

# களனி

நூறு சிந்தனை மலரட்டும்
நாறும் கீழ்மைகள் தகரட்டும்.

நதி — 1 ★ ஐப்பசி — மார்கழி 1973 ★ கிளை — 1.

"களனி"
சுப்பிரமணியம் கட்டிடம்,
கண்டி வீதி,
கிளிநொச்சி

**சந்தா விபரம்:**

ஒரு வருடம்

தபாற் செலவுடன் 3 ரூபா 50 சதம்

தனிப் பிரதி 75 சதம்

கதை, கவிதைகளில் காணப்படும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளின் கருத்துக்களுக்கு அதன் ஆசிரியர்களே பொறுப்பாவர்.

## குரல்!

கலை — இலக்கியம் வர்க்க சார்புடையவை. இதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு இராமாயணம், பாரதம் முதலான சமயக் கதைகள், முதல் இன்றைய நவீன சிறு கதைகள், நாவல்கள் வரை சான்று!

கலை — இலக்கியங்களுக்குச் சமுதாயப் பணியுண்டு. கடந்த காலங்களில் உலகநாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களிலெல்லாம் கலை—இலக்கியத்தின் பங்கு பிரதிபலித்திருப்பதைப் பார்த்திருக்கின்றோம் —! படித்திருக்கின்றோம்! இதனால் தான் வாள்முனைக்குப் பயப்படாதவர்கள் கூட சில வேளைகளில் பேனமுனைக்குப் பயப்படுகின்றார்கள்.

எந்த நாட்டுமக்களை எடுத்துக்கொண்டாலும், உழைக்கின்ற வர்க்கம், உழைப்பைச் சுரண்டுகின்ற வர்க்கம் என இருபிரிவினரைப் பார்க்கலாம் இதன் வெளிப்பாடு கலை இலக்கியத்திலும் கலை — கலைக்காக, கலை — மக்களுக்காக என்ற இரு குரல்களில் எதிரொலிப்பதைப் பார்க்கிறோம் கலை —கலைக்காக என்று சொல்பவர்கள் சுரண்டுகின்ற வர்க்கத்தார் என்றும்; கலை—மக்களுக்காக என்று சொல்பவர்கள் உழைக்கின்ற வர்க்கத்தார் என்றும் இனம் கண்டு கொள்வது இங்கே கஷ்டமல்ல!

கலை — கலைக்காக என்ற கருத்து மக்கள் மத்தியில் சிரிப்புக்கிடமானது. கலை — கலைக்காக என்றால், விவசாயி உற்பத்தி செய்யும் தானியம் எதற்காக? தானியம் தானியத்திற்காகவா? இல்லவே இல்லை. தானியம் மனிதனின் உற்பத்தி. அது என்றும் மக்களுக்காகத்தான் இருக்க முடியும்! முதலாளித்துவ சுரண்டல்காரர்கள் கலை — கலைக்காக என்று சொல்லிக்கொண்டு, கலை — இலக்கியம் என்ற போர்வைக்குள் புகுந்து, ஆபாசக் குப்பைகளைக் கொட்டிக் குவித்து, மனிதர்களின் பலவீனத்தைப் பணமாக்கி, பலத்தை இருட்டடிப்புச் செய்வதன் மூலம், தங்களின் சுகபோக வாழ்விற்கு வழி கோலிக்கொண்டே, தேச விடிவிற்கான சுபநேரத்தைப் பின் தள்ளும் வேலையை மிகச் சாதுரியமாகத் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இதைத் தேச நலனில் அக்கறை கொண்டவர்கள் அனுமதிக்க முடியாது. இதன் விளைவு———?

எமக்குள் — எம்மிடை உள்ள அபிப்பிராய — கருத்துக்களினால் வேறுபட்டு நின்றாலும், உழைக்கின்ற மக்களுக்குச் சேவை செய்யும் கலை — இலக்கிய நோக்கினால் நண்பர்கள் சிலர் ஒன்றிணைந்தோம். எமது பாதை மிகச் சரியானது ஆனால் பயணம் மிக நீண்டது. எமக்கு வழித்துணையாக நீங்களும் வாருங்கள். மிக நம்பிக்கையுடன் சேர்ந்து, நடப்போம்.

வணக்கம்.

— 'களனி'யினர் —

---

எழுத்தாளர்களே!

உங்களின் படைப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள். எமக்கு பிரபல்யமானவர்கள், புதியவர்கள் என்ற பேதமில்லை. ஆரமானவைகளுக்கு நிச்சயமாகக் களம் தருவோம். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப் படாதவைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், போதிய தபால் முத்திரையை இணைத்து அனுப்பமறக்க வேண்டாம்.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பின் அட்டை | ரூபா | 100 - 00 |
| உள் அட்டை | ,, | 80 - 00 |
| சாதாரண முழுப்பக்கம் | ,, | 60 - 00 |
| சாதாரண அரைப்பக்கம் | ,, | 30 - 00 |
| சாதாரண காற்பக்கம் | ,, | 20 - 00 |

## உறுதி!

நாளை..... நமதே !
எனெனில் நம்மிடம்
இழப்பதற்கெதுவுமில்லை.
ஆனால்...... நாம்......
இழந்தவையெல்லாம்
நம்மிடம் இழப்பதற்காக
இங்கே ஓர் வர்க்கம்
ஆயத்தமாக இருக்கிறது!
அப்படியாயின் ...
நாம் பெறுவதற்கு
நிறைய இருக்கிறது
எனின்——
நாளை..... நமதே . ...
——நமதுதான்!

— பாலகிரி

# கல்வி

## வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்

— மு கார்த்திகேசன் B. A. —

சரி பிழைகளைச் சொல்வதற்கு தமக்கு அதிகாரம் உண்டு என ஒவ்வொருவரும் கருதுகின்ற விடயம் கல்வியாகும். அது சட்டமாக இருந்தாலென்ன, மருத்துவமாக இருந்தாலென்ன, பொறியியலாக இருந்தாலென்ன அல்லது கலையாக இருந்தாலென்ன அங்கு ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஒரே விதமான உற்சாகமும் உறுதியும் இருப்பதில்லை. அவைகள் நிபுணர்களால் மட்டும் கருத்துகள் சொல்லப்படும் தலைப்புகளாக கருதப்படுகின்றன. ஆனால் கல்வித் துறையைப் பொறுத்தவரை எவராயினும் தமது கருத்தை வெளியிடக்கூடிய ஒரு துறையாகக் கருதப்படுகின்றது.

இது ஏனெனில் கல்வி சிறு பிள்ளைகளுடன் சம்பந்தப்படுவதாலும் அத்துடன், எந்த வயது வந்தவனும் சிறு பிள்ளைகளுக்கு எது நல்லது என்பதைச் சொல்வதற்கு ஏற்ற முதிர்ச்சி உள்ளவன் தான் என்று கருதுவதாலுமாக இருக்கலாம். இன்று கல்வி சர்வ வியாபகமானதாகக் கருதப்படுகிறது என்ற உண்மையும் சில வேளைகளில் மற்றக் காரணமாகவும் இருக்கலாம். ஆகவே கல்வி சம்பந்தமாகச் சரி பிழைகளைக் கூறுவதற்கு எவராயினும் போதியளவு கற்றுள்ளார்கள்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், கருதப்படுவதைப் போன்று கல்வி சர்வ வியாபகமானதா? இல்லையா? என்பதே. கூடுதலாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்வி சர்வவியாபகமானதாக மட்டுமல்ல, கட்டாயமானதாகவும் கருதப்படுகின்றது. பரந்த அளவிற்கும், ஒரு உயர்ந்த மட்டத்திற்கும் கல்வியை வளர்ச்சியுறுத்தக் கூடிய நாடு என்று கருதப்படும் இலங்கையை எடுத்துக் கொண்டால், இந்த நாட்டின் எல்லாப் பிள்ளைகளுமே பாடசாலைக்குப் போகிறார்களா? இல்லை. அவர்கள் அப்படிச் செய்திருந்தாலும் கூட அவர்கள் எல்லோருமே சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வியின் அடிப்படை, ஆகக் குறைந்த மட்டத்தைப் பூர்த்தி செய்கின்றார்களா? இல்லை.

இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் சர்வ வியாபகமான, கட்டாயமான கல்வித் திட்டத்தின் கீழ் இது தான் நிலையென்றால் கடந்த காலத்தின் நிலைமை என்ன? அன்று நிலைமை மிகவும் மோசமானதாக, ஜனத்தொகையில் மிகச் சிறுபான்மையினரின் வரம்புக்குள் மட்டும்தான் கல்வி இருந்தது பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதி படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு, அல்லது சமுதாயத்தில் தமது வேலைகளைச் செய்வதற்காகப் படிப்பிக்கப்பட வேண்டிய சமூகத்தின் பிரிவுகளைச் சேர்ந்த சாதியினருக்கு, அல்லது பாரம்பரியமாகக் கற்றுத் தந்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டும்தான் கல்வியிருந்தது.

ஆகவே வர்க்கங்கள் அல்லது சாதிகள் என்ற சமூகப் பிரிவினைகள் தான் கல்வி யாருக்கு? என்பதை நிர்ணயித்தன. அன்று கல்விகற்க வசதி

படைத்தவர்கள் முக்கியமாக ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது நிலப் பிரபுக்களுக்காக இருந்தது. முதலாளித்துவ சமூக அமைப்பில் நிலப்பிரபுக்களை ஆதரவாகக் கொண்ட முதலாளிகளுக்காக இருந்தது. இதுதான் மேற்கத்திய நாடுகளின் உண்மையான நிலைமை. ஆனால் கிழக்கில் சமுதாயத் தரங்கள் ஒரு வித்தியாசமான நிலையிலிருந்தது. யப்பானிலும், சீனாவிலும் ஒரு தளர்ந்த பாரம்பரிய அடிப்படையில் கல்வி சமூகத்தின் ஒரு பிரிவுக்குள் கட்டுப்படுத்தப்பட்டது. அதே வேளையில் இந்தியாவில் பிறப்பால் நிர்ணயிக்கப்படுகின்ற இறுக்கமான சாதி அமைப்பில் சமூகத்தில் அவரவர்களின் கடமைகளுக்கேற்ப கல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் படிப்பு வாசனையற்ற — கல்வியே கற்காத அல்லது மிகச் சிறிதளவு படித்திருக்கக் கூடியதான பரந்த வெகு ஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் கொண்ட, அவர்களிலும் பார்க்கத் தாம் மேலானவர்கள் என்று கருதுகின்ற ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம் இயற்கையாகவே தோன்றியது. உதாரணத்திற்கு பிரித்தானியாவில் பொதுப் பாடசாலைகள் என்று கூறப்படுகின்ற ஆனால் உண்மையில் தனியார் பாடசாலைகளான எற்ரன், ஹரோ போன்றவைகள் ஆளும் வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும், வசதி படைத்த வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும் மட்டும்தான் கல்வியளிக்கின்றன. இவர்களில் சிலர் கல்வியின் உயர்ந்த மட்டத்தை யடைவதற்காக ஒக்ஸ்போட், கேம்பிறிட்ஜ் ஆகிய சர்வ கலாசாலைக்குச் சென்றனர். இந்தியாவில் வரம்புக்குட்பட்ட குருகுல அமைப்பில் படித்த பிரமுகர்கள் பிராமணர்களாவார். அதேவேளையில் சீனாவில் ''மண்ட ரீன்ஸ்'' எனப்படுபவர்கள் படித்த பிரமுகர்களாக விளங்கினர்.

இன்று விவேகமான வாழ்வுக்கு ஒவ்வொருவருக்கும் கல்வி இவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படும் அதே வேளையில், சடந்த காலத்தில் இந்த வகையில் ஏன் கட்டுப்படுத்தப்பட்டது? மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத வெறும் ஒரு ஆடம்பரப் பொருளாக, ஒரு பெருமை தரும் அணிகலனாக இது கருதப்பட்டதா?

இல்லை இது அதிகாரத்தின் ஒரு கருவி— அரசியல், பொருளாதார, இராணுவ, சமூக அதிகாரத்தின் கருவி. உலகரீதியான வாக்குரிமை, உலகரீதியான கல்வி, ஜனநாயகம், மக்களின் மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற அரசாங்கம் என்று சொல்லப்படுபவைகள் இருந்த போதும் கூட, இன்றும் இன்னமும் அது அதிகார வர்க்கத்தின் ஒரு கருவியேயாகும்.

இது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களை கீழ் நிலையில் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கத்தால் பாவிக்கப்பட்ட, பாவிக்கப்படுகின்ற ஒரு கருவியாகும். உழைக்கும் வெகுஜனங்களை அடக்கிச் சுரண்டுவதற்கான சட்டங்களை இயற்றியவர்களும், பொது விவகாரங்களை விவாதித்தவர்களும், சபைகளில் கூடியவர்களும் இந்தப் படித்தவர்களே. இந்த படித்தவர்கள் தான் ஆளுநர்கள் என்ற தோரணையில் சட்டத்தை அமுல்படுத்தியவர்கள். சுரண்டப்படுபவர்களால் சுரண்டல் அமைப்பு முறைக்கு எதிராக எங்காவது பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதெல்லாம், தெய்வ உதவி கோரப்பட்டது. கடவுளுடன் கூட யார் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாயிருந்தார்கள்? படிப்பு வாசனையற்றவர்களோ, அடிமைகளோ, விவசாயிகளோ, அல்லது அரை குறை படிப்பாளிகளோ அல்ல, வேதங்களை ஓதக்கூடிய, அதன் 'புனிதமான' பொருளைக் கூறக் கூடிய, மந்திரங்களைச் சொல்லக் கூடிய படித்தவர்கள் மட்டுமே கடவுளுடன் தொடர்பு கொண்டார்கள். அது மட்டுமல்ல; தேவைப் பட்டால் பிசாசுகளையும் கூப்பிடக் கூடியவர்களாயிருந்தார்கள்!

'ஸ்கூல்' என்ற வார்த்தையின் மூலத்திலிருந்தே வர்க்க அதிகாரத்தின் கருவியாகக் கல்வி இருந்து வந்துள்ளது என்பது காட்டப்

படுகின்றது. ஓய்வு என்று பொருள்படுகின்ற 'ஸ்கொலா' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து இந்த வார்த்தை தோன்றியது. ஓய்வு நேரத்தைக் கொண்டிருக்கக் கூடிய வர்க்கத் தட்டைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே கல்வி இருந்துள்ளது என்பது வெளிப்படையான முடிவாகும். தனது வேலைகள் சகலவற்றையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களைக் கொண்டு செய்வித்த, செய்வதற்கு தனக்கென ஒரு வேலையுமே இல்லாத சொத்துடமை வர்க்கத்தைத் தவிர வேறு யாருக்கு ஓய்வு நேரம் இருந்தது? சொத்துடமை வர்க்கந்தான் ஆளும் வர்க்கமாக இருந்தது. இன்றும் இருக்கின்றது. ஆகவே கல்வி மிகச் சமீப காலம் வரைக்கும் ஆளும் வர்க்கத்துக்கே உரியது

அடுத்த கேள்வி என்னவெனில், கல்வியின் நோக்கம் என்ன? என்பதாகும். அது ஆளும் வர்க்கத்துக்காகக் கொடுக்கப் பட்டதுடன் மற்றைய வர்க்கங்களுக்கும் ஆளும் வர்க்கத்தால் கொடுக்கப்பட்டாலும், வர்க்க ஆதிக்கமுள்ள சமூகத்தின் அமைப்பு, கொள்கைகள், தத்துவம், ஆகியவற்றை ஆளும் வர்க்கத்தின் பிள்ளைகளுக்குப் போதிப்பதே அதன் நோக்கமாகும். ஒரு சமூகம் எந்தளவுக்கு வேலை செய்தது, ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக எப்படி ஒரு சமூகம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது.

மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரை சர்வ வியாபகமான கல்வியின் நவீன நடைமுறையின் கீழ் வர்க்க சமூகத்தின் பண்புகளோடு அதனுடைய கூறப்பகின்ற விடுதலை, சமத்துவம், தோழமை, ஜனநாயகம், உலகநீதி ஆகியவற்றையும் போதித்து வர்க்க ஆதிக்க சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளவும், பாதுகாக்கவும் போதிக்கப்படுகின்றது.

ஆகவே வர்க்க சமுதாயத்தில் அடக்கி, ஒடுக்கி சுரண்டப் படுகின்ற மக்கள், வெகுஜனங்கள் கல்வியின் உண்மையான வர்க்க அடிப்படையை அறிந்து கொள்வது அவசியம் இதன் மூலம் தான் மக்களின் சகல பகுதியினருக்கும் கல்வி வசதியை விஸ்தரிப்பது வர்க்க அடக்கு முறையிலிருந்து அவர்களை விடுவிக்கும் என்ற சிந்தனை வழி நடத்தப் படாமலிருக்க முடியும்.

இன்றைய கல்வியும் வர்க்க ஆட்சி தொடர்ந்திருப்பதை சகித்துக்கொள்ளும்படி அவர்களை ஏமாற்றுகிறது ★

# ஈழத்து வாசகன் ?

எழுத்தாளன் எதையும் எழுதலாம்; வாசகன் மறுவார்த்தை பேசாமல் அதைத் தன் மண்டைக்குள் தள்ள வேண்டும் என்பது நமது தமிழ் இலக்கிய பாரம்பரியம். நமது நாட்டு எழுத்தாளர்களிலும் சிலர் இந்த பாரம்பரியத்தின் வாரிசுகளாகத் தான் இன்னமும் இருக்கிறார்கள் அவர்களது பொழுது போக்கு, மன உளைச்சல் கௌரவவேட்கை எல்லாமே எமக்கு முன்னால் இலக்கியமாக உருவெடுக்கின்றன. ஆனால் மக்கள் இலக்கியத்தினால் போஷித்து வளர்க்கப்படும் நமது நாட்டின் வாசகன் இந்தமாதிரியான "அழுகல்களை" இனம் கண்டு கொள்வதில் என்றும் பின்நிற்கவில்லை. இதற்கு ஒரு உதாரணம்.

அண்மையில் திருகோணமலை முன்னோடிகள் இலக்கியக் குழுவினர் "நான் ஏன் எழுதுகின்றேன்"? என்ற கேள்வித் தலைப்புக்கு பதில் சொல்லும் பாணியில் பல ஈழத்து எழுத்தாளர்களைப் பேசவைத்தனர். அங்கு பேசிய ஒரு பெண் எழுத்தாளர் "நான் பொழுது போக்கிற்காக எழுதுகிறேன்" என்று, உண்மையை மறைக்காமல் சொல்லி முடிக்குமுன். பார்வையாளர்கள் மத்தியிலிருந்து வாசகன் ஒருவனின் குரல் ஆவேசமாக ஒலித்தது "உங்களுக்கு பொழுதுபோக வேணுமென்றால் கடுதாசி விளையாடுங்கோ, அல்லது கரம் விளையாடுங்கோ, அல்லது சொக்கட்டான் விளையாடுங்கோ, அல்லது வேறேதாவது விளையாடுங்கோ ஆனால் தயவுசெய்து எழுதாதீர்கள்! எழுதாதீர்கள்!!"

# அறைகூவல்

ராதேயன்

விரைந்தெழுங்கள் தோழர்களே
வேலை—
மிகவுண்டு எங்களுக்கு,
நாங்கள் இங்கு மேலும்
ஏங்குவதால் என்ன பயன்?
ஆகையினால் இனியும்
'இருள் விலகும்' என்று
எதிர்பார்த்திருக்க வேண்டாம்
தொலைவில்—
மினுமினுக்கும் விண்மீன்
கூட்டத்தை விழுங்கி விட்டால்
ஒளிபரவ புதிய
வழிகிடைக்கும் ஆகையினால்
உழைப்பாளர் நாம்
உணர்ச்சிப் பிழம்புகளாய்
ஓரணியாய் திரண்டு
உழைக்கின்ற நேரமிது.
—விரைந்தெழுங்கள்
வேலை
மிகவுண்டு எங்களுக்கு;

★ ★ ★

வர்க்க சமூக அமைப்பில்
வாழ்க்கையிலே
நிர்க்கதியற்றோம்
ஆயினும்—
இக்கதி இனியும்
தொடராதழிப்பதற்கு
—விரைந்தெழுங்கள்
வேலை—
மிகவுண்டு எங்களுக்கு.

★ ★ ★

எங்கள்—
ஒட்டிய வயிறுகளின்
கொதிப்பில் விரைந்தேகும்
உஷ்ணப் பெருமூச்சில்
அக்கினியை எரிமூட்டி
அகன்றதோர் சிதையெழுப்பி
அதன்மேல்
அடுக்கடுக்காய்—
—எங்கள் வயிற்றில்
நெருப்பை மூட்டிவிட்டு
அந்த நெருப்பின்
இதமான சூட்டினிலே
கூதல் காய்ந்தபடி
குளுமையாய் தூங்குகின்ற
எத்தர்கள் தம்மை
எடுத்தெறிந்து எரித்ததின் பின்
விண்மீன்கள் கூட்டத்தை
விழுங்கும் வேலையுண்டு
—ஆகையினால்
விடிவை எதிர்நோக்கி
விரைகின்ற பயணத்தை
கிளர்ந்தெழுந்து முடிக்க
கீழ் வானில் சிவப்பெரிய
விரைந்தெழுங்கள் தோழர்களே
வேலை—
மிகவுண்டு எங்களுக்கு

உரைச் சித்திரம்

# போ—ன—ஸ்

“ கதிரோன் ”

அது ஒரு தொழிற்சாலை கஸ்டமுறும் தொழிலாளர் நிறைந்த இடம். தொடர்ச்சியான இடைவிடாத ஊக்கத்தினால் அவ்வாண்டு தொழிற்சாலை மிக இலாபத்தில் இயங்கியது. இதன்பயனாக போனஸ் என்னும் இலாபப் பங்கீடு வழங்கும் தீர்மானம் ஊழியரின் கோரிக்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஊழியர்களுக்கோ தீர்மானித்த தொகை குறைவு என்ற கவலை. அரசை ஆதரிக்கும் சங்கங்கள் உட்பட சகல சங்கங்களும் கூடின! அதனால் போனஸ் எடுப்பதில்லை என்ற தீர்மானம் பிறந்தது. தந்தியும் பறந்தது அதிகாரிகளுக்கு!! ஆனால் பதில் இல்லை. தொகையில் மாற்றமும் இல்லை. இவ் வேளையில் நடவடிக்கை எடுக்கத் தூண்ட வேண்டுமென்ற நோக்கினால், ஊழியர்கள் மேலதிக வேலைகள் செய்யாமல் தாமாகவே நிறுத்திக் கொண்டனர். அப்படியும் பதிலில்லை. மீண்டும் அடையாள வேலை நிறுத்த நடவடிக்கை. அநேகர் பங்கு பற்றினர். கூட்டம் நடந்தது.

இவ்வேளையில் எப்படியும் போனஸ் வழங்கிவிட வேண்டுமென நிர்வாகம் ஒற்றைக் காலில், அதுவும் தனியே பெருவிரலில் அடம் பிடித்து நின்றது. சிறுப்பரும் ஓர் சங்க அங்கத்தவராதலால் போனஸ் வழங்கும்போது ஊழியர்களுக்கு ஏதாவது புத்திமதி கூறக்கூடும் என்றும், அதனால் தங்களின் திட்டம் தடைப்பட்டு விடவும் கூடும் என்றஞ்சிய நிர்வாகம், கீழ் மாடியில் இருந்த சிறுப்பரை மேல் மாடிக்கு மாற்றியது.

இந் நிலையில் கணக்காளரின் முன் காசு வழங்கவும் ஏற்பாடுகள் நடைபெற்றன. இறுதியில் இன்னமும் திருப்தி ஏற்படாததால், பூனை குட்டியைக் காவியது போல் மீண்டும் போனஸ் பணம் தொழிற்சாலை அதிகாரிகளின் அறைக்குக் காவிச் செல்லப்பட்டு. வழங்கப்பட்டது! ஊழியரின் ஐக்கியத்தில் நம்பிக்கை வைக்காத சிலர் போனஸ் எடுக்கத்தான் செய்தனர்!

இரு மாதங்கள்! மேலதிக வேலையில்லை, இலவச தேநீர் குடிப்பதில்லை. தொழிற்சாலையில் உற்பத்தி வேலைகள் உரிய முறையில் கவனிக்கப்படுவதில்லை. இதனால் பெருந் தொகையான உற்பத்திப் பொருட்கள் கழிவு வாய்க்காலிலும் ஓடியது.

''அம்மான் உதென்ன கூட்டம் ரோட்டோரத்திலை! வண்டிலை நிப்பாட்டு பாப்பம்"

"அது உந்த பக்டரி பொடியங்கள் போனஸ் காசு

காணுதெண்டு, ஒவற்றை நம் வேலையும் செய்யிறேல்லை யாம். லீவிலும் நிக்கினமாம். அதுதான் அவையின்ரை கூட்டம்''

''அது சரி அம்மான் பொடியள் கேக்கிறதும் நியாயம் தானே! அவங்கள் கஸ்டப் பட்டு உழைச்சவங்கள் லாபத்திலே இன்னும் கொஞ்சம் கூட்டிக் கொடுத்தால் என்னவாம். குறைஞ்சே போய்விடுவினம்''

''தம்பி... அரசு! நீ சொல்லிறது பத்து முறையும் சரி. இவ்வளவு நாளும் நட்டம் போனது அவங்களுக்குக் குடுக்கக் காணும். ஆனல் விட்டுக் குடுத்தால் இதைப் பாத்து மற்றவையும் கேட்பினம் எண்ட ஒரு கெட்ட எண்ணம்!

''ஓம் அம்மான்! இருந்து பாப்பம். அங்கை பார் அந்த நெடுவல் பொடியன் நல்லாப் பேசிருன். ஏதோ நல்லா நடந்தால் சரி.''

பொழுது விடிந்து - இருண்டு, இரண்டு மாதங்கள் ஓடி விட்டன.

''அம்மான் பக்டரியிலே வேலை நடக்குப்போலே கிடக்கு பிறகென்னவாம்?''

''தம்பி போனஸ் எடுத்த இரண்டு பேர் பாலத்தாலே போகேக்கை ஆரோ மறிச்சு அடிச்சுப் போட்டு, சைக்கிலேயும் பறிச்சுப் போட்டினமாம். உது ஆரோ உணர்ச்சி வசப்பட்ட பொடியளின்ரை வேலை தான் எண்டு சொல்லுகினம்.''

''என்னெண்டாலும் அம்மான் உப்பிடிச் செய்யப்படாது. அவங்களும் என்ன கஸ்டத்திலே போனஸ் எடுத்தாங்களோ. சிலர் வேணுமெண்டும் எடுத்திருக்கக் கூடும். பொங்கலும் வந்ததலலே ஒரு வேளை அந்தச் சிலவுகளுக்கும்........''

''என்ன இருந்தாலும் ஐக்கியப் பட்டு நிற்கேக்கை, ஐக்கியத்தைக் குலைக்கிறது, கருங்காலி வேலை செய்யிறதுவும் உணர்ச்சியைக் கூட்டும் தானே''

''பிறகு?''

''அதுக்குப் பிறகு ஒரு பிழை நடந்து போச்சாம். எங்கட ஆக்களுக்கும் ஆரை நம்புறது ஆரை நம்பக் கூடாது எண்டு தெரியாது. இவன் நெடுவல், அவனும் அவன்ரை சங்கத்து உப தலைவர் பொடியனும் ஒருதருக்கும் தெரியாமல் போனஸ் எடுத்துப் போட்டினமாம். உவங்கள் உப்பிடிச் செய்தால் மற்றவையளுக்கு எப்பிடி இருக்கும்.''

''பொறுக்கிப் பயலுகள்''

''ஆனலும் மிச்சப் பேர் உறுதியாய் நிண்டதாலே பெரிய இடத்திலே இருந்து உத்தியோகத்தர் வந்து, தொழிலாளியளுக்கு ஆதரவாய் பேசிப் போட்டுப் போனுராம்.''

''இவங்கள் இனியென்டாலும் சத்துராதிகள் ஆர் தோள் கொடுக்கிறவன்கள் ஆர் எண்டு யோசிச்சு அலுவல் பாக்க வேணும்''

— ★ — ★ —

---

# ஒகோ... மனிதர்களே!

— சின்னே வெங்கட்ராமன்

பக்தர்களே
—சற்று நில்லுங்கள்
பாவத்தை போக்கவா
பகவானிடம் போகிறீர்கள்...?
ஏழையைப் படைத்ததால்
—கடவுள்
ஏற்கெனவே பாவம் செய்தார்!

அதனைத் தீர்க்க
அவருக்கு—
ஆயுளில் இயலுமா...?
இன்னுமா நீங்கள்
— அங்கே
இறக்கு மதிக்(கு) ஓடுகிறீர்...?

களனிக்கு எமது நல்வாழ்த்துக்கள் !

# பரந்தன் இரசாயனக் கலேமன்றம்

## இரசாயனத் தொழிற்சாலே

### பரந்தன்

அதிக வெண்மையான சலவைக்கு

## நாகேஸ்வரி லோன்றி

பட்டு உடைகளே
தண்ணீரில் போடாது
சலவை செய்து
கொடுக்கப்படும்.

உரிமையாளர் :
இ. பொன்ராசா

53, ஸ்ரான்லி வீதி : யாழ்ப்பாணம்

கிளிநொச்சியில்

சுவைமிக்க
உணவு
சிற்றுண்டி
பாண், கேக்
குளிர்பானங்கள்

## சித்தி சைவ ஹோட்டல்

உரிமையாளர்: வி. ஆர். லோகேஸ்வரன்

கண்டி வீதி : கிளிநொச்சி.

# அம்மா மாறி விட்டாள்!

—செ. கந்தசாமி

தன் தாய்க்கு நோய் கடுமை என்று செய்தி வந்ததும் அவன் வெகுவாகப் பதறிப் போனான். சிவபாதத்தின் தாய் கனகம்மாவுக்கு சுகயீனம் என்றால் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. நாளும் பொழுதும் நோய்காறி என்று பெயர் எடுத்தவள் அவள். நோயோடு நோயாக இந்தப் பாழும் 'எனீமியா' வியாதியும் வந்து அடிக்கடி அவளைப் பாடாய்ப் படுத்தி விடுகிறதே! இது மூன்றாவது தடவை. இந்தத் தடவை மிகவும் கவலைக்கிடமான நிலைமை என்பது செய்தியில் தெரிந்தது. சிவபாதத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனேயே ஊருக்குப் பயணமானான்.

ஏற்கெனவே நோயின் சாத்தியக் கூறுகளை தாயாரின் கடிதம் மூலம் அறிந்திருந்து கூட இத்தனை நாட்களாக, ஊருக்குச் சென்று தாயைப் பார்க்க முடியாமைக்காக தன்னையே நொந்து கொண்டான் அவன்.

ஊருக்குப் போய்ச் சேர சரியாக ஐம்பது மைல்களுக்கு மேல் 'பஸ்' பிரயாணம் செய்ய வேண்டும். 'பஸ்' எப்பொழுதுதான் போய் சேருமோ என்ற பதட்டமும், அம்மா எப்படி இருக்கிறாளோ என்ற பராதியுமாக உள்ளூற மனம் புழுங்கினான். மனம் தாயின் நினைவிலேயே லயிக்க 'பஸ்' இருக்கையில் சாய்ந்தபடி இருந்தான்.

கனகம்மா எப்பொழுதுமே இப்படித்தான். நேரகாலத்திற்கு சாப்பாடு கிடையாது. சதா இருபத்தி நான்கு மணி நேரமும் வேலை வேலை என்று பறப்பாள். அவளும் தான் என்ன செய்வாள் பாவம் குடியும் குடித்தனமுமாகி விட்ட மைந்தரின் உழைப்பை நம்பி இருக்கக் கூடாது என்ற ஒரு மன வைராக்கியத்தில், நாளுக்கு நாள் ஜுரம் போல் ஏறிக் கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவுடன் போராட முடியாத நிலையில், தின்றது பாதி தின்னாதது பாதியாக தன் உடம்பைக் காய்ச்சிக் காய்ச்சி நோய் நொடியை எல்லாம் கொள்வனவு செய்து கொண்டிருக்கிறாள்,

சிவபாதத்தின் தகப்பன் இராமலிங்கம் என்ன செய்வார். வாலிபத் துடிப்பில் மதுவரக்கனின் கோரப் பிடியில் சிக்கிக் கிடந்த அவர் ஆடிய ஆட்டமெல்லாம் முடிந்து இப்போது உடலில் வலுவற்று உழைக்கும் திறனற்று ஒடுங்கி ஒதுங்கிப் போயிருக்கிறார். இருபத்தைந்து ஆண்டுகளாகத் தன் இன்பத்திலும் துன்பத்திலும் நிழலாக இருந்த அன்பு மனைவி தன்னை விட்டுச் சென்று விடுவாளோ என்ற ஏக்கத்தில் விழி பிதுங்க உட்காந்திருக்கிறார்.

குடும்ப பாரம் தன் தலையில் விழுந்தாலும், தான் நொந்தாலும் யாரையும் நோக விடக் கூடாது என்ற தியாக மனமும் பொறுப்புணர்ச்சியும் அபரிமிதமாகத் தன்னகத்தே கொண்டவள் கனகம்மா சமயாசாரங்களிலும், விரத அனுஷ்டானங்களிலும் மனதைச் செலுத்துமளவிற்கு உடல் நலத்தில் அக்கறை கொள்வது கிடையாது. வெளியில் வெகுதூரம் சென்றால் கூட ஒரு வாய் தேனீர் கூடப் பருகச் சம்ம

திக்க மாட்டாள். ''கடைகண்ணியிலே எந்தக் கீழ் சாதியெல்லாம் பிளாங்குதோ'' என்பாள். 'பஸ்' பிரயாணம் என்றால் கூடக் கனகம்மா தயங்குவாள். ''இப்ப 'நளம், பள்' எல்லாம் சரி சமனாக இருக்க வந்திட்டுதுகள்'' என்று அலுத்துக் கொள்வாள். நிலப் பிரபுத்துவ பரம்பரையின் சிறந்த வாரிசான கந்தப்பரின் மகளாகப் பிறந்து பழைய மரபுகளிலேயே ஊறிப் போய் அதையே பேணி வரும் அவளிடம் வேறு எதைத் தான் எதிர்பார்க்க முடியும்

சாதி, சமயம், தீட்டு, பழமை என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே நின்று உழன்ற அளவிற்கு சிறிதளவாவது மாறிவரும் சமுதாயத்தின் போக்கிற்கும் விட்டுக் கொடுத்திருக்கலாம். தனது உடல் நலத்திலும் அக்கறை செலுத்தியிருக்கலாம். அதைப் பற்றி ஏதாவது பேச்சு வந்தால் ''எங்களின் காலம் கிட்டிவிட்டது; காடு வா வா என்குது வீடு போ போ என்குது, எங்களுக்குப் படிப்பிக்க வராதையுங்கோ'' என்று ஓரேயடியாகப் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்து விடுவாள்.

கனகம்மா இவ்வளவு தூரம் சாதி சமயம் பார்த்து, கோயில் குளமென்றும் பூஜை புனஸ்காரம் என்றும் இருந்தாலும் நாளும் பொழுதும் அவளுக்குச் சுகயீனம் தான்.

''ஐயோ! அம்மாவுக்கு ஒன்றும் நேர்ந்துவிடக் கூடாதே'' என மனதிற்குள் பிரார்த்தித்தவாறே 'பஸ்' இருக்கையில் சாய்ந்தபடி இருந்த சிவபாதம் ''மந்திகைஆஸ்பத்திரியடி!'' என்ற கண்டக்டரின் குரல் கேட்டு துடிக்கப் பதைக்க இறங்கி ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தான்.

ஆஸ்பத்திரியில் அவனுக்காகவே காத்திருந்தவன் போல் அவனுடைய தம்பி கோபாலன் அவனை வழி கொண்டு வரவேற்றான். அண்ணனைக் கண்டதும் தம்பி கோபாலனின் கண்களில் நீர் திரையிடுகிறது. அவனுடைய முகபாவத்திலிருந்தே தாயாரின் நிலைமை சுமுகமாக இல்லை என்பது சிவபாதத்திற்கு புரிந்து விடுகிறது.

''அம்மாவுக்கு நிலமை மோசமாக இருக்கிறது, உடனடியாக இரண்டு பைந்து இரத்தம் ஏற்றியாக வேண்டுமாம்'' என்றான் கோபாலன் நாத்தழுதழுக்க;

''ஏன்! அவர்கள் இரத்த வங்கியில் இருந்து கொடுக்கவில்லையா?''

''அம்மாவிற்கு வேண்டிய அந்த குறூப்பைச் சேர்ந்த இரத்தம் வங்கியில் இல்லையாம்''.

''இரத்தம் வழங்கக் கூடிய ஒருவராவது அகப்படவில்லையே?

''அதை ஏன் அண்ணை கேட்கிறீங்கள். இரத்தம் வழங்க வேண்டி வருமே என்று சுகம் விசாரிக்கக் கூட வருவதை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள் நம் உறவினர்'' என்றான் கோபால் விரத்தியாக.

''அப்படியென்றால் இப்போ என்ன செய்ய'' சிவபாதத்தின் குரலில் பதட்டம்

''நானும் கூடிய வரையில் முயற்சித்துப் பார்த்து விட்டேன் யாருமே இரத்தம் வழங்க முன் வரவில்லை. நியூமோனியா காய்ச்சல் மாறி எழும்பி நாலு நாள் கூட ஆகவில்லை. இந்த நிலையிலை என்னாலும் இரத்தம் கொடுக்க முடியாது'' என்றான் கோபால் அழாக்குறையாக.

அப்போது பார்வையாளருக்குரிய மணி அடிக்கவே வெளியில் கூடி நின்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு உள்ளே விரைகின்றனர். சிவபாதமும் கோபாலுடன் கூடவே தாய் கனகம்மா படுத்திருக்கும் 'வாட்'டிற்கு விரைகிறான்.

சிவபாதம் தாயைக் காணுதை இந்த இரண்டு மாத இடை வெளிக்குள் அவள் எவ்வளவு மாறிப் போய் விட்டாள். கண்களில் கருவளைய மிட்டுக் குழி விழுந்துபோய், முகமெல்லாம் சுருங்கி வாடிப் போய், கூந்தல் பரட்டையடிக்க உடலே பாதியாக வற்றி, உருகி உருக்குலைந்து போய்... அவள் கட்டிலில் படுத்திருந்த கோலம்... சுவாசிக்கக் கூட கஷ்டப் பட்டுத் தீனமாக அனுங்கியபடி படுத்திருப்பதைப் பார்க்க 'ஓ' வென்று அலற வேண்டும் போல் இருக்கிறது சிவபாதத்திற்கு.

மகனைக்கண்டதும் ஏதோ சொல்ல முயன்றும் முடியாமல் உதடுகள் பிரிந்து சேருகின்றன. விழிகள் மட்டும் ''மகனே! நீ வந்திட்டியாடா'' என்பதுபோல் மலர்ந்து சோர்கின்றன. விழியோரத்தில் கண்ணீர் முத்துக்கள் மாலை கோர்க்கின்றன.

உள்ளத்தில் ஊறும் உணர்ச்சியை அடக்கியபடியே மௌனமாக நிற்கிறான் சிவபாதம். உள்ளம் ஊமை அழுகை அழுகிறது.

தன்னருகே வரும்படி மிகுந்த சிரமத்துக்கிடையே தாய் சைகை காட்டியதும் சிவபாதம் அவன் முகத்தருகே குனிகிறான்.

''மேனை! நீ மட்டும் உன்ர இரத்தம் குடுக்கச் சம்மதிக்காதேயடா. நான் சாகப் போகிறனான் தானே! தானாகத் தேறினால் தேறட்டும். அதுக்காக உன்ர இரத்தத்தைக் குடுத்து, உன்ர உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே; நீ என்ர மகன் என்று சொல்லாதே; சொன்னால் இரத்தம் குடு என்று கரச்சல் படுத்துவினம்''

மிகுந்த சிரமத்துடன் தாய் விடுத்த கோரிக்கை அவனுக்கு ஆறுதல் அளிக்கவில்லை. மாறாக வேதனையைக் கொடுக்கிறது. மகன் இரத்தம் கொடுத்தால், இயல்பாக வலுவற்ற அவனுடைய உடல் நிலை பாதிக்கப்படுமே, பாழாய்ப் போகுமே என்ற பீதியில் அவனை இரத்தம் வழங்க வேண்டாம் என்று வேண்டிக் கொண்டதுடன் மகன் என்று காட்டிக் கொள்ள வேண்டாம் என எச்சரிக்கையும் விடுக்கிறாளே.

கோபாலுங் கூட அப்படித்தான் சொன்னான். இயல்பாகவே மிக மெலிந்த காத்திரமில்லாத தேகம் இரத்தம் கொடுப்பதனால் பாதிக்கப்பட்டு விடும் என்பது உண்மைதான் என சிவபாதம் நம்பினான். தான் இரத்தம் வழங்கினால் தன் உடல் அந்த இரண்டு பைந்து இரத்தத்தின் இழப்பைத் தாங்கும் என்பதில் அவனுக்கு நம்பிக்கையில்லை

"அப்படியானால் அம்மாவை இப்படியே கஷ்டப்பட விட வேண்டியது தானா'' எனப் பதறிய சிவபாதம் கோபாலுடன் பேசி எப்படியாவது கடைசி முறையாக ஊரெல்லாம் சல்லடை போட்டுத் தேட முயல்வதாகப் புறப்பட்டார்கள். இருவரும் தங்களுக்குத் தெரிந்தவர்களையும் தெரிந்தவர்களுக்குத் தெரிந்தவர்களையும் கேட்டுப் பார்த்தார்கள், இரந்து பார்த்தார்கள், பணம் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுப்பதாக ஆசைகாட்டிப் பார்த்தார்கள்; ஆலாய்ப் பறந்தார்கள் ஓடினார்கள், தேடினார்கள்... பலன்?

இரத்தம் வழங்கும் நிலையில் உள்ள ஓரிரு உறவினர் கூட தங்களுக்கு உடல் நலம் சரியில்லை என ஒதுங்கிக் கொண்டனர்.

ஒரு நண்பனை அணுகிக் கேட்ட போது ''ஐயோ! நாளை ஒரு விளையாட்டுப் போட்டியில் பங்குபெற வேண்டுமே! அல்லது உதவாமல் விட்டு விடுவேனா?'' என்று கையை விரித்தான்.

இன்னொருவர் — உடம்பில் மிதமான இரத்த ஊற்றின் விளைவாக இரத்த அமுக்க வியாதிக் குணமுள்ளவர் — டாக்டரின் சிபார்சின் பேரில் மாதா மாதம் குறிப்பிட்ட திகதிக்கு இரத்த வங்கிக்கே சென்று இரத்தம் நிர்ப்பந்தமாக வழங்குபவர். அவரைப் போய்க் கேட்ட போது ''ஐயோ! தம்பி! நான் நேற்றுத் தான் இரத்த வங்கியில் இரத்தம் கொடுத்து விட்டு வந்தேன்" என்று உதட்டைப் பிதுக்கினார்.

உடலும் உள்ளமும் சோர கவலையுடன் திரும்பி வந்தனர் அண்ணனும் தம்பியும். ஏமாற்றத்தின் எல்லையில் சிவபாதம் ஒரு முடிவுக்கு வந்தான். இப்படி ஒரு அபாயகரமான நிலைமையில் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை அவனால். ''அம்மாவிற்கு வேண்டிய இரத்தத்தை நாமே கொடுக்கத் தயங்கினால் வேறு யார் தான் முன் வருவார்கள்'' என எண்ணிப் பார்த்தான், தானே இரத்தம் வழங்குவதாகச் சொன்னால் அம்மா முதல் கொண்டு யாருமே சம்மதிக்க மாட்டார்கள் என்பது அவனுக்.

குத் தெரியும். யாருமறியா வண்ணம் இரத்த வங்கிக்குச் சென்று இரகசியமாக இரத்தத்தை வழங்கி, தாயாருக்குச் செலுத்தும்படி டாக்டரைக் கேட்பதற்காக இரத்த வங்கி அலுவலகத்தை நோக்கி அடி எடுத்து வைத்தான் சிவபாதம்.

அப்போது......

''சிவபாதம்!'' என்று பழக்கப்பட்ட குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

''யார் அது?' சின்னத்துரை!''

சின்னத்துரை அவனுடைய பால்ய நண்பன் மட்டுமல்ல அத்தியந்த நண்பனும் கூட. சின்னத்துரை மரமேறும் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவன். ஆரம்ப முதல் அவர்கள் ஒன்றாகவே படித்தவர்கள்; விளையாடியவர்கள். சின்னத்துரை படிப்பில் சிவபாதத்தை விட கெட்டிக்காரனாக இருந்தான். சின்னத்துரை தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்ததாலும் வசதியற்ற சூழலில் இருந்தமையாலும் சமுதாயத்தின் கட்டுக்கோப்பில் இருந்து தப்பி முன்னேறவோ அவனுடைய திறமைக்கேற்ற தொழிலில் செல்லவோ அவனுக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. அவனுடைய குலத்துக்கே இடப்பட்ட சாபக்கேடு போல், அவனும் தந்தையின் தொழிலையே மேற்கொள்ள வேண்டியதாயிற்று

சிவபாதம் எப்படியோ படித்து அரசாங்கத்தில் ஒரு இலிகிதர் சேவையில் அமர்ந்துவிட்டான்.

அவர்களின் சாதி ஏற்றத் தாழ்வுகளும், உத்தியோக நிலைமையும், வாழ்க்கைத் தரமும் சமூகத்தின் கெடுபிடிகளும் அவர்களின் நட்பை மட்டும் எதுவிதத்திலும் குறைக்க முடியவில்லை. சின்னத்துரையின் நடையிலும் பாங்கிலும் ஒரு தாழ்ந்து போன இனத்தின் அடிமைத்தனம் இல்லை; மாறிவரும் ஒரு சமுதாயத்தின் புதிய தலைமுறையின் மிடுக்குத்தான் தெரியும். அவன் செயலில் பண்பு பரிமளிக்கும். கண்ணியம் மிளிரும் இவை சிவபாதத்தை மிகவும் கவர்ந்திருந்தன. சிவபாதத்தின் முற்போக்கான கருத்துகள் சின்னத்துரையை மிகவும் வசீகரித்தன. இருவரும் இணையற்ற நண்பர்கள்.

சிவபாதம் விடுமுறையில் ஊருக்கு வரும்போதெல்லாம் அவனைத் தேடி வீட்டிற்கே வந்து விடுவான். சின்னத்துரை. சிவபாதம் எவ்வளவு தான் முற்போக்குக் கருத்துகள் கொண்டவனாக இருந்தாலும். பழமை மரபில் ஊறிப் போய் விட்ட தாய் கனகம்மாவின் கருத்திற்கு மாறாக, சின்னத்துரையை வீட்டிற்குள் அழைத்து, கதிரையில் இருத்தி, தேனீர் கொடுத்து உபசரிக்கும் அளவிற்கு துணியவில்லை. படலையடியில் நின்று, மணிக்கணக்காகப் பேசிவிட்டுப் பிரிவர் நண்பர்கள் இருவரும்.

இன்று கூட சிவபாதத்தின் தாய் நோய்வாய்ப்பட்டிருக்கிறாள் என்ற செய்தி கேட்டுப் பறந்தோடி வந்து விட்டான்!

''சிவபாதம்! நீர் ஒன்றுக்கும் யோசியாதையும், அம்மாவுக்கு வேண்டிய இரத்தம் நான் வழங்குகிறேன்" என்றான் வந்ததும் வராததுமாக.

உழைத்து உரமேறி வலுத்து முறுகித் திரண்ட சின்னத்துரையின் உடம்பை ஏறிட்டு நோக்கினான் சிவபாதம். ஆனைக்குட்டிபட்ட ஆண்சிங்கம் போலப் பணிவாகவும் அதே சமயம் மிடுக்காகவும் நின்று சிவபாதத்தின் பதிலுக்குக் காத்திருந்தான் சின்னத்துரை. என்னவெல்லாமோ எண்ணங்கள் இதயத்தில் பளிச்சிட ஒரு கணம் தயங்கிய சிவபாதம். ஏதோ முடிவுக்கு வந்தவனாய் மறுகணம் சின்னத்துரையை அழைத்துக் கொண்டு இரத்த வங்கிக்குச் சென்றான்.

இரத்தம் எடுக்கப்பட்டு உடனடியாகக் கனகம்மாவின் உடலில் செலுத்தப்பட்டது. ''எல்லாமே நல்லபடியாக நடந்திருக்கிறது. இனி உங்கள் அம்மாவின் உயிருக்கு ஆபத்தில்லை'' என்ற டாக்டரின் நம்பிக்கை

பொதிந்த வார்த்தைகள் செவிகளில் தேனாக விழ வெளியே வந்தனர் சிவபாதமும் சின்னத்துரையும்.

''சின்னத்துரை! நீ காலத்தில் செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறன்'' என்றான் சிவபாதம் தொண்டை கரகரக்க.

''சிவபாதம்! இதென்ன பேச்சு! இதெல்லாம் பெரிய உதவியோ! மனிதாபிமானம் உள்ள எவனும் செய்யக் கூடியதை—செய்ய வேண்டியதைத் தான் நானும் செய்தேன். இதிலென்ன பெரிதாகப் புகழ இருக்கிறது. கவலையை விட்டு அம்மாவுக்கு வேண்டியதைக் கவனியும்'' என்றவன் விடை பெற்று நகர்ந்தான்.

அன்று 'நெஞ்சு முட்டு' மாறிக் கனகம்மா நிம்மதியாகத் தூங்கினாள். அதன் பின் கனகம்மாவின் உடல் நலம் வேளைக்கு வேளை தேறிக் கொண்டு வந்தது.

சரியாக ஒரு வாரம் கனகம்மா 'வார்ட்'டில் படுத்திருந்தாள். சிவபாதமும் கோபாலனும் ஓடி ஓடி கனகம்மாவிற்குப் பணிவிடை செய்தனர். அன்று டாக்டரின் அனுமதியுடன் கனகம்மா வீட்டிற்கு வந்து விட்டாள்.

அன்று சரக்கு அரைத்துக் காய்ச்சிய பத்தியக் குழம்பும் குழையக் குழைய அவித்த வெள்ளை அரிசிச் சோறும் சாப்பிட்ட பின்பு கனகம்மா ஆயாசம் தீர, தூணில் சாய்ந்தபடி இருந்தாள்.

''அம்மா! உடம்பு இப்போ எப்படியிருக்கு'' என்று ஆர்வத்துடன் விசாரித்தான் சிவபாதம்.

''அதிக நாட்களுக்குப் பிறகு சாப்பிட்டதோ இல்லையோ வயிறு கனமாக இருக்கிறது. மற்றப்படி நல்ல சுகம்தான். யாரோ ஒரு புண்ணியவான் நேரத்திற்கு வந்து இரத்தம் தரவில்லை என்றால் நான் உயிரோட பிழைத்திருப்பேனா, உங்களோட இப்படி இருந்து கதைக்கக் கிடைச்சிருக்குமோ''? என்றாள் அம்மா ஒரு பெருமூச்சை உதிர்த்தபடி.

''அப்படிச் சொல்லணை அம்மா! எங்கட இனம் சனம் எல்லாம் இரத்தம் தரப் பயந்து சுகயீனம் கூடப்

# இலக்கிய வேசைத்தனம்!

சர்வோதயம் பேசிய எழுத்தாளர் மு. தளையசிங்கத்தின் அகால மரணத்தை முன்னிட்டு அனுதாபக் கூட்டம் ஒன்று சில மாதங்களுக்கு முன் யாழ் நகரில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் பேசிய, யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வரும் மாத சஞ்சிகை யொன்றின் ஆசிரியர்- (அவர் ஒரு பிரபல ''மனிதாபிமான எழுத்தாளரும் கூட) தளையசிங்கத்தின் மறைவை பேரிழப்பாகக் குறிப்பிட்டு, மிகவும் மனம் வருந்தி விளாசு விளாசு என்று விளாசினார். தளையசிங்கத்தின் மறைவு இந்த பத்திரிகை ஆசிரியருக்கு இவ்வளவு மனக் கவலையை உண்டு பண்ணியுள்ளதா என கூட்டத்திலிருந்தவர்களை திகைக்க வைத்த இவ்வாசிரியர் அதன் பின்பு, யாழ்/ வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற நாவல் வெளியீட்டு விழாவொன்றுக்கு வந்திருந்த சமயம் அவரைச் சந்தித்த சில இளம் எழுத்தாளர்கள், 'பிற்போக்கு கொள்கைகளுக்கு வக்காலத்து வாங்கிய தளையசிங்கத்தின் அனுதாபக் கூட்டத்தில் ஏன் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டீர்கள்' என வினவிய போது, அந்த 'முற்போக்கு' எழுத்தாளர் கதையோடு கதையாக கூறிய பதில் இதுதான்; ''தளையசிங்கம் இப்ப செத்தது நல்லதாய்ப் போச்சு. இன்னும் ஐஞ்சாறு வருஷம் இருந்திருந்தால் சர்வோதயம், மயிர், மண்ணாங்கட்டி என்று இளம் தலைமுறையையே கெடுத்துப் போடுவான்.''

பார்க்க வராமல் இருக்க அவன் ஒருவன் தானாக முன் வந்து இரத்தம் தந்தானோ நீ பிழைத்தாயோ'' என்றான் சிவபாதம்.

''யாரடா அந்தப் பொடியன்? அவன் நல்ல படியாக வாழவேணும். இந்தப் பொல்லாத சனங்கள் இருக்கிற பூமியிலைதான் அப்படி நல்ல பிறவியளும் இருக்குதுகள்'' கனகம்மா வியந்தாள்.

''இருக்கிறார்கள் தான். ஆனால் நாங்கள் தான் அவர்களைத் தள்ளி வைத்து வேடிக்கை பார்க்கிறம், எள்ளி நகையாடி ஏடாகூடம் பண்ணுறம்''

''என்னடா தம்பி சொல்லுகிறாய்?''

''அம்மா! இரத்தம் தந்தது வேறு யாருமில்லை சின்னத்துரை!

''என்னது? சின்னத்துரையோ? அவன் கந்தன்ரை மகனோ?''

''ஓ! அவனே தான்'' கனகம்மா உடலுக்குள் ஆயிரமாயிரம் புழுக்கள் நெளிவதைப் போல அருக்குளித்து முகம் சுளித்தாள். ''ஏனடா மேனை! நான் இவ்வளவு ஆசாரமா பரிசுத்தமா இருந்து விட்டுக் கடைசியில் இந்த தீண்டாத சாதியின்ரை இரத்தமே என்ரை உடம்பில ஓட வேணும். இதிலும் பார்க்க நான் செத்துத் தொலைச்சன் இல்லையே! என்ரை பிள்ளையும் என்னை ஏமாற்றிப் போட்டானே! இந்த வசை எப்ப தீரும்? எப்படித் தீரும்?''

கனகம்மா பொருமினாள்; வெடித்தாள் வெதும்பினாள். சிவபாதத்திற்கு இதை ஏன் இப்பொழுது தாயிடம் சொன்னோம் என்றாகி விட்டது. தேறிய உடம்பு நன்றாகத் தேறி வர முன்பு மனதை அலட்டிக் கொள்கிறாளே என மனதிற்குள் எண்ணியவன்

''ஏன் அம்மா சாகப் போகிற நேரத்திலை அநத இரத்தம் தானே உன்னைக காபபாற்றியது'' என்றான்.

''எடே! இதால் பார்க்க நான் செத்தால என்ன'' குமுறினாள் கனகமமா

''கொஞ்சம் முன்னாடி தானே அம்மா முன்னிலும் பாரக்க உடமபு சுகமா இருக கிறதாகச் சொல்லிச் சநதோஷப் பட்டநீங்கள். இப்ப மட்டும் எனன வந்தது. இரதத வங்கியில் இருககிற இரத்தம எல்லாம் உயர்ந்த சாதி ஆட்கள் கொடுத்த இரத்தமா? ஏன்? சின்னத்துரையின உடம்பிலே ஓடுற இரத்தமும் உங்கள் உடம்பிலை ஓடுற இரத்தமும் ஒன்று தான். நிறத்திலை, குணத்திலை வித்தியாசமில்லை. இரண்டும் ஒத்திருப்பதாக விஞ்ஞான ரீதியாக பரீட்சித்துப் பாரத்துக்கண்டுபிடிச்சுத்தான் உடம்பில் செலுத்தப்பட்டது. இரத்தத்திலேயே பேதம் இல்லாதபோது இல்லாத பேதம் ஒன்றை நாமே உண்டாக்கி பாராட்டிக் கொண்டிருந்து நாங்கள் அவதிப்படுகிறம்; நம்மையே நாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறம்.''

''எடே! உந்த அசட்டு விசு டமெல்லாம் எங்கே படிச்சனி? முன்னவர்கள் ஒன்றுந் தெரியாமலோ இதுகளை உண்டாக்கி வைச்சவை.''

''அம்மா! முன்பிருந்த சில அதிகார வர்க்கத்தினரும் சுரண்டல் பேர்வழிகளும் தங்கள் சொகுசுக்காக தங்கள் நலத்தைப் பாதுகாக்க தொழில் வாரியாக வந்த சமூகப் பிரிவினைககு, சாதி என்ற வேலியிட்டுப் பூச்சாண்டி காட்டி விட்டிட்டினம். இப்பவும் நாங்கள் அந்தச் சாதியையே கட்டியழுது கொண்டு அந்தக் குறுகிய வட்டத்துக்குள்ளேயே வளைய வந்து நம்மை மடையராக்கிக் கொண்டிருக்கிறோம்."

''அந்தக் காலத்திலை அப்படி இருந்தார்கள் என்பதற்காக இப்பவும் நாங்கள் அந்தச் சேற்றிலேயே அழுந்திக் கிடக்க வேணும் என்று நியதியில்லை, இப்பயோ காலம் மாறிப்போச்சு. கால ஓட்டத்திலை, சமுதாய வளர்ச்சியிலை, முன்னேற்றப் பாதையிலை பொருளாதார விருத்தி வேண்டி நிற்கிற இந்தக் கால கட்டததிலை நாங்கள் புதிதாகச் சாதிக்க எத்தனையோ இருக்கு! செயல்மாற்றத்திற்கு முன்னோடியாக மனமாற்றம் தேவை. சாதியிலை குறைந்தவர்கள் என்று நாங்கள் தள்ளி வைத்தவர்கள் எல்லாம் இப்போ நாகரிகத்திலை, பண்பில், உழைப்பில், ஒற்றுமையில், ஒழுங்கில், ஆசாரத்தில் நம்மிலும் பார்க்க ஒரு படி மிஞ்சிக் கொண்டு வருகிறார்கள் என்றால் அதிகம் தவ

றில்லை. அவர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். நாங்களும் எப்பொழுதுமே அவர்களை ஏமாற்றிக்கொள்ளலாம் என்ற காலம் மலையேறிப் போச்சு. நாங்கள் இன்றும் நம்மையே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. நாங்கள் அவர்களைத் தள்ளி வைக்கிற காலம் போய், அவர்கள் எங்களைத் தள்ளி வைக்கிற காலம் வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.'

தாயோடு நேருக்கு நேர் இப்படி கதைத்து பழக்கமில்லாத சிவபாதம் சந்தர்ப்பம் சாதகமாக அமையவே தன் உள்ளக்கருத்துகளைக் கொட்டிவிட்டான். அவன் அப்போது மிகவும் உணர்ச்சி வசப் பட்டிருந்தான். "நான் இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்தேன்" என்று உணர்த்துவது போல் தகப்பன் இராமலிங்கத்தாரும் ஒரு முறை செருமியபடி கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

கனகம்மாவும் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்தாள். அவளும் சிந்திக்கத் தலைப்பட்டு விட்டாளோ! கனகம்மாவின் கண்களிலும் இராமலிங்கத்தாரின் கண்களிலும் ஒரு புது வித ஒளி; திக்குத் தெரியாத காட்டில் கண்ணைக் கட்டிவிட்டவர்களுக்கு, கட்டை அவிழ்த்து இமைகளைத் திறந்து விட்டாற் போல. சில கண நேரம் ஒரு வித மௌனம்!

"தம்பி! ஒருக்கால் அவனைக் கூட்டிக் கொண்டு வா... அவனைத் தான் – சின்னத் துரையை."

கனகம்மாவின் குரலில் ஒரு கனிவு. பாசத்தின் இழைவு!

சிவபாதம் பிரமிப்புடன் தாயை நோக்குகிறான்.

"அம்மா மாறிவிட்டாள்."


சகல விதமான
பலசரக்கு வகைகளுக்கு
சாய்ப்புச் சாமான் வகைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்



முருகானந்தா ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி,
பரந்தன்.

கிளிநொச்சியில்

பல சரக்கு வகைகள்
சாய்ப்புச் சாமான்கள்
போக்குவரத்து சேவை

தொடர்பு கொள்ளுங்கள்:
வரதன் ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி,
கிளிநொச்சி.

# கற்க கசடற...!

- சுபத்திரன்

பள்ளி வளவை
சமூகத்தில் நின்று
பிரிக்கின்ற எல்லையென
—கம்பிவேலி......!

★ ★ ★

மாணவரின் கூச்சல்
அதையடக்க ஆசிரியர்
விடுக்கும் எதிர்க் கூச்சல்!
இடையிடையே
பிரம்பும் சிறுகரமும்
மோத எழும்பும்
கிசீர்... கிசீர்... ஓசை
குறித்த ஒரு சந்தத்தில்
மணியின் நாதம்
மண்ணாண்ட மன்னர்களின்
கொடுமைக்கு
'சென்ற்' பூசும்
மாளிகைகள்
குளங்கள்
கோயில்கள்
மண்டபங்கள்
கல்வெட்டுகள்
மீது சுரண்டி யெடுத்த
தகவல்கள்......!

★ ★ ★

என்றோ வரைந்த
உலகப் படத்தின்
அரசியற் பிரிவுகள்
எல்லைக் கோடுகள் ...
பிரித்தானியரின்
அடிச் சுவடொட்டி
வரைந்தெடுத்த
ஆபிரிக்க
சீன
மக்களின் படங்கள்......!

★ ★ ★

கணக்கைச்
செய்யுள் முறையில்
படித்து மனனஞ் செய்யும்
'ஆயிரம் காலப் பயிர்' எனும்
நினைவில் ...
பழைய 'மெதட்' ஒழுகல்.

★ ★ ★

இரசாயன பௌதீக
உறுப் புகள் காட்டும்
மாயா ஜாலங்கள்.

★ ★ ★

ஆண்டவனின்
சிருஷ்டி இரகசியம்!

★ ★ ★

மொழியின் பெயரால்
கடந்த பல நூற்றுண்டின்
செத்தகருத் தேற்றம்.

★ ★ ★

பள்ளிச் சுவரை
சித்திரத்துக் கொப்பியென
நினைத்து
மனக் கிடக்கை
கிண்டியெடுத்த
ஓவியங்கள்.....
ஏட்டில் எழுதி
கருத் தெழுதிக்
காப்பாற்ற
மொழியறிஞர்
மறந்திட்ட சொற்கள்!

★ ★ ★

ஆசிரியர்; பெருந்தகையார்
குடும்பப் பிரச்சனையின்
உரையாடல்.....
இத்தனையும் சேர்ந்து
எனது கவி நீளும்
என்கின்ற அச்சத்தால்
—விடுபட்ட
அத்தனையும் சேர்த்து
பள்ளி நடக்கின்றது
எதிர் கால உலகத்தின்
சிருஷ்டி நிகழ்கிறதோ?

---

# செந்தீ!..

— அஜீதா

வீரம் செறிந்த
வீர வியட்நாமிலே
பிறந்த
ஹோ - சி - மின்
என்னும்
பாட்டாளி வர்க்கப்
புரட்சி வீரன்
ஏகாதிபத்தியத்துக்கு
எதிராக
மூட்டிவிட்ட செந்தீ
வியட்னும், கம்போடியா
லாவோஸ் ஊடாக
தாய்லாந்துக்கும்
பரவுவதைத்
தடுக்கும் எண்ணத்துடன்
டாலர்களைக் கொட்டிடும்
அமெரிக்க ஏகாதிபத்தியமே...!
அதனை அணைக்க
உன்னல் முடியாது!..
மீண்டும்
மீண்டும்...
தவறு செய்யும்
அமெரிக்காவே
நீ... இதை அறியாயோ?..

★ ★ ★

# வெளிச்சம்

- சிவா

நமது இயக்கம்
ஓரிரு வழிகளில்
மாநதி போன்றது
எங்கெங்கிருந்தோ
வழி வழி வந்து
இணைவன பிரிவன
உயர்வன வழிவன
நீர்த்துளி பற்பல
தனித் தனியாக
இனங் கண்டறியோம்
நதியென்றறிவோம்
கலையென்னும் குறிக்கோள்
திரையெனும் யதார்த்தம்
காலத்துடனே
வழிசில மாறினும்
குறிக்கோள் மாறா
நதியும் —
நம்முடை இயக்கமும்
ஒரு சில வழிகளில்
ஒன்றுபோல்வன!
ஒன்றுபோல்வன!!

★ ★ ★

நமது இயக்கம்
ஓரிரு வழிகளில்
நதியின் கரையின்
மூங்கில் போன்றது
ஆத்திரம் கொண்டு—
—சீறிடும் காற்றில்
வளைந்து பின்னர்
வானுற நிமிரும்
தவறி முறிந்து
போயினும் கூட
மண்ணிற் பிறந்து
வேர்களைப் பரப்பிய
மூங்கில் மறுபடி
தழைத்துச் செழிக்கும்
நிலைமை உணர்ந்து
நடப்பதில் சொந்த
நிலத்தை நம்பி
இருப்பதில் எங்கள்
இயக்கமும் மூங்கிலும்
ஒன்றுபோல்வன!
ஒன்றுபோல்வன!!

★ ★ ★

நமது இயக்கம்
ஓரிரு வழிகளில்
காலை வானில்
காரிருள் பிளந்து
செங்கொடி எழுப்பும்
சூரியன் போன்றது
தொடரும் விடிவை
வருமுன் கூறும்
இத்துணை மங்கிய
ஒளியில் உலகம்
விடியுமோ என
சிலர் ஐயுறினும்—
—உறுதி கொண்டு
வளர்ந்து புதிய
நாள் செயும் வகையில்
எங்கள் இயக்கமும்
எழும் சூரியனும்
ஒன்றுபோல்வன!
ஒன்றுபோல்வன!!

★ ★ ★

சிறுகதை

# துயரங்களினூடே — ஓர் நிறைவு

சசி. கிருஷ்ணமூர்த்தி

"தம்பி..."

எங்கள் வீட்டின் முன் திண்ணைக் குந்தில் அமர்ந்து ஆழ்ந்த சிந்தனையில் இருந்த என்னை அம்மாவின் துக்கம் தோய்ந்த குரல் சுயவுணர்வுக்குக் கொண்டு வந்தது. அம்மாவைத் திரும்பிப் பார்க்கின்றேன்.

"இப்பிடி யோசிச்சுக் கொண்டிருந்தால் என்ன தம்பி செய்யிறது ஆரிட்டையும் ஒரு முப்பது ரூவா கேட்டுப் பாரன். பிறகு மாறிக் கீறிக் குடுப்பம்..."

அம்மா இலேசாகக் கூறி விட்டா. யாரிடம் போய்க் கடன் கேட்பது? எங்களைப் போன்ற ஏழைகளை நம்பி யார் கடன் தரப் போகிறார்கள்? அதுவும் முப்பது ரூபா?

காலையில் தான் ஐயாவை ஆஸ்பத்திரியில் கொண்டு சென்று விட்டோம். தன் உடல் நலத்தையே பாராத அவரின் கடும் உழைப்பு அவரை ஒரு மாதத்துக்கு முன்பு படுக்கையில் விழுத்தி இன்று ஆஸ்பத்திரியில் சேர்க்கும் நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. அவசரமாக அவருக்குக் கொடுக்க வேண்டிய மருந்து கைவசமில்லாததால் அதை வெளியே வாங்குவதற்கு டாக்டர் துண்டு தந்திருந்தார். அந்த மருந்துக்கு முப்பது ரூபாவுக்குக் குறையாமல் வேணுமாம்!

சேட் பொக்கட்டைத் தட்டிப் பார்க்கின்றேன். இரண்டொரு சில்லறைகளுடன் டாக்டர் கொடுத்த மருந்துத் துண்டும் அங்கே பாதுகாப்பாக இருக்கின்றது.

தனக்கு வந்த சிறு சிறு வருத்தங்களையும் பொருட்படுத்தாது. எங்களுக்காக உழைத்து, உழைத்து உருக்குலைந்து இன்று ஆஸ்பத்திரிக் கட்டிலில் நோயுடன் போராடிக் கொண்டிருக்கும் ஐயாவின் மெலிந்த உருவம் என் மனக் கண்களில் தெரிகின்றது.

என் உள்ளம் வேதனையால் கனக்கின்றது!

தங்கள் குடும்பங்கள் வறுமையுடன் போராட, அவற்றைப் பொருட்படுத்தாமல் குடித்துக் கொண்டும், வீண் வம்புகளிலும் ஈடுபட்டுத் திரியும் எத்தனையோ மனிதர்களை நான் கண்டிருக்கின்றேன். ஆனால் எங்கள் ஐயா அவர்களைப் போல் அல்ல. தானுண்டு தன் குடும்பம் உண்டு என்று வாழ்ந்தவர். கூலி வேலை செய்தாலும் அதையும் நேர்மையுடன் கண்ணியத்துடன் செய்து, அதில் இருந்து கிடைக்கும் சொற்ப ஊதியத்தைக் கொண்டு, மற்றவர்கள் பார்த்துப் பல்லிளிக்காத முறையில் எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வந்ததோடு என்னையும் ஜீ. சீ. ஈ. உயர்தர வகுப்பு வரைக்கும் படிக்க வைத்து விட்டார். அவர் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவார்; "தம்பி படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்திட்டானெண்டால் பிறகேன் நான் இப்படிக் கஷ்டப் படப் போறன்... நல்லாப் படிக்க வைச்சால் அவனுக்கொரு நல்ல உத்தியோகம் கிடைக்காமலோ போகப் போகுது..."

ஐயா எவ்வளவு கனவு கண்டு கொண்டிருக்கிறார். பாவம்... படித்ததும் மகனுக்கு

வேலை கிடைக்கும் அதனால் கஸ்டங்கள் தீரும் வசதியாக வாழலாம் என்ற குருட்டுநம் பிக்கை அவருக்கு!

ஐயா படும் கஸ்டத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்குக் கவலையாகத் தான் இருக்கும். எனக்குப் பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் நான் அவருடன் வேலைக்கு வரப் போவதாகக் கூறுவேன். அப்பொழுதெல்லாம் ஐயாவுக்கு சரியான கோபம் வந்துவிடும். அவர் என்னைக் கோபத்துடன் பார்த்துவிட்டு; ''டேய்... நான் உன்னைக் கொண்டு உழைப்பிக்க வேணுமென்றால் எப்பவோ உன்னைப் பள்ளிக்கூடத்திலை இருந்து மறிச்சு வேலைக்குக் கூட்டிக் கொண்டு போயிருப்பன்...'' என்று கூறுவார். அவரது வார்த்தைகளில் அவர் என் எதிர்காலத்தில் கொண்டிருக்கும் அக்கறை - நம்பிக்கை எல்லாம் அப்பட்டமாகத் தெரியும்!

மதியபோசனத்துக்காகப் பாடசாலையில் இருந்து வந்த எனது தங்கையும், சின்னத் தம்பியும் சிணுங்குவது கேட்கின்றது. அம்மா ஏதோ சமாதானம் கூறுகிறா. அவர்களுக்குப் பசி!

மேலும் அங்கே இருக்க என்னால் முடியவில்லை. யாரிடமாவது கடன் கேட்டுப் பார்க்கலாமென்ற நினைப்புடன் எழுந்து வீட்டை விட்டு நடக்கின்றேன்.

'யாரிடம் கடன் கேட்பது...?'

சிவராசா, தருமு ஆகியோர்களது ஞாபகம் வருகின்றது. நான் இவர்களைத் தவிர வேறு யாரிடமும் கடனோ - உதவியோ கேட்பதில்லை. இவர்களிடமும் நெருங்கிய நண்பர்கள் என்ற முறையில் தான் சிற்சில வேளைகளில் உதவி கேட்டிருக்கின்றேன். அவர்களும் முடிந்தபோதெல்லாம் உதவியிருக்கின்றார்கள்.

முதலில் சிவராசா வீட்டுக்குப் போகின்றேன். அவன் என்னுடன் கூடப்படித்தவன். இப்பொழுது கடையொன்றில் வேலை செய்கின்றான்.

''சிவராசா...''

''ஆரது அட குணமே என்ன மச்சான்...'' சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் நான் கூப்பிட்டதும் சாப்பிட்ட கையோடையே வெளியே வருகின்றான்.

நான் அவனிடம் விஷயத்தைக் கூறுகின்றேன்.

அவன் முகம் சுருங்குகின்றது.

''குணம் . குறை நினைக்காதை மச்சான்... முந்த நாள் தான் சம்பளம் எடுத்தனான் ஒரு சதமும் இல்லாமல் முடிஞ்சு போச்சு...'' அவனது குரலில் இரக்கம் இழையோடுகின்றது.

உண்மையில் அவனிடம் இருந்தால் கட்டாயம் தந்திருப்பான். நான் அவனிடம் இருந்து விடை பெறுகின்றேன் ஏமாற்றத்துடன்!

அடுத்தவன் தருமு! அவன் சந்தியில் சைக்கிள் கடை வைத்திருப்பவன்.

மத்தியான வெய்யில் நெருப்பாகக் கொளுத்துகிறது!

தார் வீதி பாதங்களை அவிக்கின்றது!

அதோ தருமுவின் சைக்கிள் கடை. சைக்கிள் ஒன்றைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறான் தருமு

''தருமு ''

என் குரல் கேட்டதும் தருமு திரும்பிப் பார்க்கிறான்.

''என்ன குணம்... என்ன விசயம் இந்த வெய்யிலுக்கை...'' சோர்வடைந்திருந்த எனது முகத்தைக் கூர்ந்து பார்த்தபடி கேட்கின்றான் அவன்.

தளுதளுத்த குரலில் வந்த காரணத்தைக் கூறுகின்றேன். அவனது முகம் கவலையால் இருள்கிறது.

''குணம் . நீ கொஞ்சம் முந்தி வந்திருக்

சுக் கூடாதே... இப்ப தான் இருந்த காசிலே கடை வாடையும் குடுத்து சீட்டுக் காசும் குடுத்தனான்... கொஞ்சம் முந்தியிருந்தால் அதிலே தந்திருக்கலாம்...'

ஐயாவின் அதிர்ஸ்டத்தை நினைக்க எனக்கு அழுகை தான் வருகின்றது.

'இனி என்ன செய்யலாம்...?'

காலும் மனமும் சோர்வடைய மெதுவாக நடக்கின்றேன்.

எனது இதயத்தில் சோர்வு-விரக்தி-துயரம்!

நினைவில் சிறு மின்னல்!

'கிளாக்கர் பாலசிங்கத்தாரிடம் போனால் ?

கிளாக்கர் பாலசிங்கத்தாரின் பிள்ளைகளுக்கு நான் தான் ரியூசன் சொல்லிக் கொடுப்பது. அதுவும் இந்தக் கிழமை தொடக்கம் தான்.

'சீ... போய் அஞ்சாறு நாட்கள் ஆகேலை... அதுக்கிடையிலே என்னெண்டு காசு கேட்கிறது...?' என்னிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அங்கு போகவும் தயக்கம்!

'நான் அவர்களிடம் கடனா கேட்கப் போகிறன்...? இல்லை... மாதம் முடிவில் எனக்கு வரவேண்டிய எனது உழைப்பின் கூலியை இப்பொழுது கேட்கப் போகிறன்... அதிலென்ன தவறு...' வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் எனக்கு நானே சமாதானம் கூறிக் கொண்டு கிளாக்கர் வீட்டுக்குப் போகின்றேன்.

கிளாக்கரைக் காணவில்லை. அவர் கந்தோருக்குப் போல் இருக்கின்றது. பிள்ளைகளையும் காணவில்லை. கிளாக்கரது மனைவி மட்டும் கைக்குழந்தையுடன் வீட்டின் முன் விறாந்தையில் இருக்கின்றாள்.

''என்ன தம்பி...'' அவளின் குரலே எனக்குச் சாந்தி அளிக்கின்றது.

நான் தயங்கித் தயங்கி விஷயத்தைக் கூறுகின்றேன். என் நிலை அவளுக்குப் புரிகின்றது! கொஞ்சம் இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே சென்றவள் நான் கேட்ட தொகையை எடுத்து வந்து தருகின்றாள்.

நான் அவளுக்கு நன்றி கூறிவிட்டு வெளியேறுகின்றேன்.

இப்பொழுதே ஐயாவுக்கு வருத்தம் சுகமாகிவிட்டது போல் இருக்கின்றது. அவ்வளவு சந்தோஷம். வீட்டுக்குச் சென்று காசு கிடைத்ததை அம்மாவுக்குக் கூறிவிட்டு பஸ் தரிப்பை நோக்கி நடக்கின்றேன். ஆஸ்பத்திரிக்கு பஸ்சில் தான் போக வேண்டும்.

நேரம் போய்க் கொண்டு இருக்கின்றது. பஸ்சை மட்டும் காணவில்லை.

''சீ .. இந்த வசுக்கோதாரி நேரத்துக்கு வராது சும்மா வெண்டால் அடிக்கடி வரும்...'' என்னுடன் பஸ்சுக்குக் காத்து நின்ற ஒருவர் அலுத்துக் கொள்கின்றார்.

எனக்கும் பொறுமையாக நிற்க முடியவில்லை.

நடந்து போகலாமென்று எண்ணுகின்றேன். ஆனால் மூன்று மைல் தூரத்தையும் சுட்டெரிக்கும் வெயிலையும் எண்ணிய நான் அவ்வெண்ணத்தை மாற்றிக் கொள்ளுகின்றேன்.

என் நினைவு, இறந்த உடலைச் சுற்றிச்சுற்றி வரும் ஈ போல் ஆஸ்பத்திரியில் நோயினால் அவஸ்தைப்படும் ஐயாவை சுற்றிச்சுற்றி வருகின்றது.

ஒன்றன் பின் ஒன்றாக வந்த இரண்டு பஸ்கள் நிற்காது எம்மை விட்டுச் செல்கின்றன. அவற்றுள் சனக்கூட்டம் பிதுங்கி வழிகின்றது. எம்மை அலட்சியமாகக் கடந்து செல்லும் பஸ்களை அங்கு நின்றவர்களுடன் ஒருவனாக பார்த்துக் கொண்டு நிற்கின்றேன்.

"தம்பி... நீர் சின்னப்பற்றை மோனல்லே..." திரும்பிப் பார்க்கின்றேன். பலசரக்குக் கடை வைத்திருக்கும் நடராசர். அவரை எனக்கு மட்டுமல்ல எங்கள் ஊரில் தெரியாதவர்களே கிடையாது. சிறிய பல சரக்குக் கடையொன்றை வைத்துக் கொண்டு இரண்டு கல் வீடுகளும், நாலைந்து காணிகளையும் வாங்கிய 'திறமை'யைப் பற்றிக் கதைக்காதவர்களே இல்லை. . அவர் யாருச்கும் கடன் இல்லையென்று சொல்லாத 'நல்ல' மனசு படைத்தவர். கடன் கொடுத்துவிட்டு கணக்கு வைத்திருப்பவரும் அவர் தான். கணககுப் பற்றி நியாயம் கேட்டால் அவ்வளவு தான். எங்கள் ஊரில் வேறு கடையில்லாததையும், எங்கள் ஊா மக்களின் வறுமையையும் பயன்படுத்தி பிழைத்துக்கொள்பவா தான் நடராசர்.

"ஓம் ..." தலையை ஆட்டுகின்றேன்.

"அவர் எங்கே தம்பி... வீட்டிலே தானே..." தவறணையில் இருநது வருகிறார் போல் இருக்கின்றது. 'தண்ணி' வாடை அடிக்கின்றது. சகித்துக் கொள்ளுகின்றேன்.

"அவர் வீட்டிலே இலலே .. சுகமில்லையெண்டு காலமை தான் ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் விட்டனுங்கள்... ஏனண்ணை என்ன விஷயம்..."

"தம்பி... முந்திக் கொப்பர் கடையிலே சாமானு வாங்கின காசு ஒரு இருவத்தைஞ்சி ரூபா மட்டிலே தரவேணும் .. நானும் கேள் கேளௌனறு கேட்டு அலுத்துப் போனன்..." தோளில் இருந்த சால்வையைச் சரிப்படுத்திக் கொண்டு கூறுகின்றார்.

அன்று ஒரு நாள் ஐயா, நடராசர் கடைக்குக் காசு கொஞ்சம் கொடுகக வேணுமென்று கதையோடு கதையாகக் கூறியது ஞாபகத்துக்கு வருகின்றது.

"ஓமண்ணை... ஐயாவும் உங்களுக்குக் காசு தரவேணுமெண்டு தானை சொன்னவர்... அவரிப்ப ஆசுப்பத்திரியில... இரண்டொரு கிழமையிலே நான் அந்தக் காசை தந்திடுறன்..." ஏதோ ஒரு துணிவு எனக்கு!

"தம்பி .. நானிப்ப உம்மட்டை அந்தக் காசை கேட்க வரேலை... உம்முடைய கொப்பற்றை யோக்கியத்தைச் சொல்லத்தான் வந்தனான்..." எனக்குச் 'சுருக்'கென்று கோபம் வருகின்றது. அடக்கிக் கொள்ளுகின்றேன்.

'என் ஐயாவின் யோக்கியதைப் பற்றி இவர் சொல்லியா எனக்குத் தெரிய வேண்டும்...?'

"குறை நினைக்காதையுங்கோ... நான் கட்டாயம் தந்திடிறன்..."

பஸ்சுக்கு நின்றவாகளுக்கு நல்ல பொழுது போக்கு. எல்லோரும் எங்களையே பார்க்கின்றார்கள்! நடராசர் ஏளனமாகச் சிரிக்கின்றார்.

"ஓமோம்... சின்னப்பர் தந்து முடிச்சிட்டார்... இனி நீர் தான் குடுக்கப் போறீர்... தம்பி இது எனக்குப் பெரிய காசில்லை... உது பிச்சைக்காரனுக்குப் போட்ட காசு..." அவர் வாயில் இருந்து வந்தவை வார்த்தைகளா?... இல்லை, கூரிய அம்புகள்!

எனக்கு உடுப்பேதும் இல்லாத உடம்போடு நிற்கும் உணர்வு!

'இதை விட வேறு அவமானமும் வேண்டுமா...?' என் இரத்தம் சூடேறுகிறது!

'டக்'கென்று எனது நடுங்கும் விரல்களைச் சேட் பொக்கட்டிக்குள் விட்டு எடுத்த தாள்களில் இருபத்தைந்து ரூபாயை அவரிடம் விட்டெறிகின்றேன்.

"இந்தாரும்... இது ஐயாவுக்குத் தான் மருந்து வாங்க வைச்சிருந்த காசு... மருந்து வாங்கக் காசில்லாமல் செத்துப் போகலாம்... ஆனால்..." கோபமும் வேதனையும் வார்த்தைகளுக்குத் தடை போடுகின்றன.

என்னால் மேலும் பேச முடியவில்லை!

அங்கே வேதனையில் முனகும் ஐயாவின் ஞாபகம் வருகின்றது.

என் உள்ளத்தில்...? துயர அலைகளின் பேரிரைச்சல்!

அந்தத் துயரத்திடையேயும் ஒரு நிறைவு...!

அது...?

பஸ் ஒன்று வந்து நிற்கின்றது.

உங்கள் மோட்டார் வாகனங்களின் பற்றறிகளைச் சீராகப் பராமரிக்க

துரை அன் கோ விற்கு விஜயம் செய்யுங்கள்.

பற்றறி பழுது பார்ப்பு

பராமரிப்பு

ஆகியவற்றில் பல வருட அனுபவம் பெற்றவர்கள்

உங்கள் தள்ளாத வயதிலும் கூட வாகனத்தை தள்ள வைக்காதது

‘டெகனேற்’ பற்றறி ஒன்றே

விபரங்களுக்கு:

**துரை அன் கோ.**
23/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:
கண்டி வீதி,
பரந்தன்:

களனிக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

# சிக்கனக் கல்வி நிலையம்

நெடுந்தீவு

க. பொ. த. ப. (சாதாரண) வகுப்புகளுக்கு
சிறந்த முறையில் தரமான
ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும்
ஒரே கல்வி நிலையம்

சிறுகதை

# எனக்குள்ளே ஒரு எரிமலை புகைக்கிறது!

-யோ. பெனடிக்ற் பாலன்

நீண்ட காலத்தின் பின் ஏதாவது எழுதவேண்டுமென்று எனக்குள்ளே ஒரு ஆசை சிலிர்க்கிறது. இப்போது நல்ல நேரம்; வீட்டில் எல்லோரும் தூங்கி விட்டார்கள்.

என்ன எழுதுவது? கதை தான். கதை எழுதி என்ன? என்று ஒரு வருஷம் இருந்து விட்டேன் எழுத மனமில்லை. எழுதியென்ன எழுதாமல் விட்டென்ன எல்லாம் ஒன்று தான். எனக்கு அப்படிப்படுகிறது. எழுதுவதென்ன சாப்பிடுவதிலேயே மனம் விட்டுப் போசசு எல்லாத்தை எப்பிடி எழுதியென்ன சமுதாயத்தில் ஒரு விளைவையும் காணேம். அதுஒரு செக்கு மாடு மாதிரி பழைய வட்டத்தில் சுற்றிச் சுற்றி வருகிறது. ஆனல் மாடு மேலும் மேலும் மோசமாகிக் கொண்டு வருகிறது.

கதை எழுதி சமுதாயத்தை மாற்ற முடியுமா?

எங்கு பார்த்தாலும், வர்ழத துடிக்கின்ற மக்களின ஏக்கங்களும, பெருமூச்சுக்களும், அழுகைகளும், அவலங்களும் தான் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன.

எங்கு யாரைச் சேட்டாலும் ஒரே பிரச்சினைகள். என்ன பிரச்சினைகள்? வேறு என்ன பிரச்சினைகள்? வாழ்க்கைப் பிரச்சினைகள் தான்! எனக்கும் பிரச்சினை; என் வீட்டிலும் பிரச்சினை.

எனக்கு என்ன வேலை...? ஊரெல்லாம் அலைந்து திரியும் பொழுது வாழ்க்கையின் பல மட்டங்களில் உள்ள மக்களோடு பழகி, அவர்கள் முகங்களை கூர்ந்து கவனிதுப் பார்த்தேன. எழுத்தாளன் இல்லையா?

எல்லோர் முகங்களிலும் சிரிப்பு குறைந்து கொண்டிருக்கிறது.

என் வீட்டில் முந்திய கலகலப்பு இல்லை.

அப்பு இப்ப தூங்கியிருக்க மாட்டார். அம்மாவுக்கு யோசனையில் நித்திரையே வருவதில்லை. இப்பவும் கண்ணை மூடிக் கொண்டு தான கிடப்பா. எனக்கு? பல வகையிலும் நன்ருக மனம் விரக்தியுற்று விட்டது. இப்பவும் என்ன அப்படித்தான்.

"க்கும்-க்கும்-ப்பு"

இந்தா என் அப்பு இருமுகிருர். அம்மா திண்ணையில் கிடக்கிரு. அவர்களுக்கு நானும் ஒரு சுமை? வேறெப்படி நினைக்கிறது? இந்த நிலையில் நானும் கதையா எழுத?

அப்புவும், அம்மாவும் இரவும், பகலும், வெய்யிலிலும், மழையிலும் சதா நிலத்தைக் கிண்டி அதிலே பாடுபட்டு எனக்கு உணவு, உடை, படிப்பு தேவையான எல்லாம் சகலதும் தந்து வளர்த்து விட்டுள்ளார்கள். நான் இன்னும் அவர்களுடைய சோற்றைத் தின்கிறேன். அப்புவும் அம்மாவும் இன்றைக்கும் தோட்டத்துக்குப் போய் விட்டுத்தான் வந்து கிடக்குதுகள்.

அவர்கள் உழைப்பாளிகள்!

நான்! பெரிய படிப்பாளி; பட்டதாரி! சும்மாவா?

சும்மா தான் இருக்கின்றேன்.

ஐந்து வயது தொடங்கி பாடசாலை சென்று இருபத்தைந்து வயது வரை படித்தேன்! படிப்பா? சித்திரவதை அது இப்பத்தான் தெரிகிறது. அப்போ! ஒரே படிப்பு; ஓயாத படிப்பு. காலையில் நாலு மணிக்கு அப்பு எழுப்பி விடுவார். பிறகு இரவு பத்து மணி பன்னிரெண்டு மணி வரை படிப்பு "தம்பி நீ நன்ருகப் படித்தால் நான்

பெரிய ஆளாக' வரலாம்'' என்று அடிக்கடி அப்பு சொல்லுவார். 'நான் பெரிய ஆளாக வரவேண்டும்; 'லோங்ஸ்' போட்டுக் கொண்டு, சொந்தக் கார் வாங்கி ஓட வேண்டும்' என்று எண்ணி, அப்புவின் சொல்லை நம்பிப் படித்தேன்.

இந்தக் குடிசையில், இந்த இடத்தில் இருந்து தான் படித்தேன். இதைப் பெரிய கல் வீடாகக் கட்டவேணும் என்றும் நினைத்தேன். இன்று இக்குடிசையின் கூரை மேயவே அப்புவிடம் பணமில்லை. என்னிடம்... நினைக்கவே வெட்கமாக இருக்கிறது.

எத்தனை போட்டிப் பரீட்சைகள்! அப்பப்பா..! அரிவரி வகுப்பில் இருந்து போட்டி தானே. அநேகரை முட்டாள்களாகத் தள்ளிவிடும் பரீட்சைகளில் எல்லாம் நான் தப்பி, பல்கலைக் கழக புதுமுகப் பரீட்சையில் சித்தியடைந்தேன்!

அன்று எனக்கு இருந்த தலைக்கனம்! இனி என்னைப் பிடிக்கேலாது; அப்படி ஒரு பெருமை!

''தம்பி இனி ஒரு 'பெரிய ஆள்' தான்'' கோப்பாயில் - என் ஊரில் - எல்லோரும் கூறினார்கள்.

அப்புவுக்கும் அம்மாவுக்கும் ஊரில் நல்ல மதிப்பு ஏறி விட்டது. அன்று வீட்டில் பட்டாசு வெடித்து' பெரிய கொண்டாட்டம்!

''சிவசம்புவுக்கு இனி என்ன; மூத்தவன் பெரிய படிப்பு படிக்கப் போறான்'' என்று அப்புவைக் கண்டவர்கள் எல்லோரும் கூறினார்கள். அப்பு வீட்டில் வந்து கூறிப் பெருமைப்பட்டார்.

''தம்பி படிச்சு முடிச்சு வந்து வேலைக்குப் போனால் சகோதரங்களையெல்லாம் நல்ல நிலைக்குக் கொண்டு வந்திடுவான். எனக்கினிக் கவலையில்லை" என்று அம்மாவுக்குக் கூறினார். அம்மா சிரித்தா.

வீட்டில் எல்லோரும் என்னைப் பெருமையோடு சர்வகலாசாலைக்கு அனுப்பி விட்டார்கள். நான் பேராதெனியாவுக்குக் குதூகலத்தோடு போனேன். அப்பு சொல்லி விட்டார்:

''தம்பி! நீ படிக்கப் போறாய்; உனக்கு இருக்கிற பொறுப்பு உனக்குத் தெரியும். கெட்ட கூட்டாளித்தனம் கூடாது. யோசிச்சு நடந்து கொள்.''

நான் சர்வகலாசாலையில் அப்படியே நடந்தேன். படிப்பில் மட்டும் தான் கவனமாக இருந்தேன். என்னோடு வந்தவர்கள் எல்லோரும் என்னென்னவோ எல்லாம் செய்தார்கள். எனக்கு அப்புவின் பயம். சிவசத்தியமா நான் எதிலும் பங்குபற்றவில்லை. என்னை அங்கு எல்லா மாணவர்களும் "பேயன்" என்றார்கள். நான் கவலைப்படவில்லை.

குறுக்காலை போகக் கூடாது; ஒரு பெரிய ஆளாக வர வேண்டும் என்பது தான் என் நோக்கம்.

அங்கு மாணவர்கள் அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டார்கள். ஒவ்வொரு கட்சியைச் சொல்லிக் கொண்டு திரிந்தார்கள். அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் கொடி பிடித்துக் கொண்டு பங்கு பற்றினார்கள். ''எதிர்காலம் இளைஞர்களுடையது'' என்று எத்தனையோ கோஷம் போட்டார்கள்.

நான் என் றூமிலேயே இருந்து கொண்டேன். அவர்கள் எல்லோரும் நாசமாய்ப் போவதாக எனக்குப்பட்டது. என் நண்பர்களான சிலருக்கு ''இதெல்லாம் விழல் வேலை'' என்று புத்திமதியும் கூறினேன்.

இது ஒரு கூட்டம். இன்னொரு கூட்டம் பெண்களோடு கூடிப் பேசி, காதல் கொண்டு மிக ஜாலியாக அந்த மூன்று வருஷங்களையும் கழித்தார்கள். அப்படிச் செய்ய எனக்கும் கொள்ளை ஆசை. நான் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

பெண்கள் மத்தியில் நான் ஒரு நல்ல பிள்ளை. தானும் தன்பாடும். அந்த மூன்று வருட காலத்தில் எனக்கு வீட்டில் நடக்காத நடப்பு எல்லாம் நடந்தது.

எனக்கு மட்டுமில்லை. யாழ்ப்பாணத்தில், படிக்கிற எல்லோருக்கும் அப்பிடித்தான். தகப்பனும், தாயும் தங்கள் உழைப்பு, பணம், நம்பிக்கை,

எல்லாவற்றையும் பிள்ளைகளின் படிப்பில் தான் முதலீடு செய்து, அதிலிருந்து வருமானம் பெறவல்லவா காத்திருக்கிறார்கள்.

ஊரில் எனக்கு தனி மதிப்பு! பல்கலைக் கழகத்தில் அல்லவா படிக்கின்றேன்!

நான் பீ.ஏ. பாஸ் பண்ணி விட்டேன் என்று 'றிசல்ட்' வந்ததும், நான் கொண்ட மகிழ்ச்சி!

என் அப்பு அடைந்த சந்தோஷம்! என் அம்மா கொண்ட பெருமை! என் தங்கச்சிமார், தம்பிமாரின் பூரிப்பு!

ஒரே கொண்டாட்டம் வீட்டில்; பட்டாசு வெடிவெடியென்று வெடித்துத் தள்ளியது.

எல்லாம் அப்புவின் வேலை தான்.

அன்று அப்பு வீட்டில் எல்லோரையும், ஊரில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போய் கும்பிட்டார். எனக்கு ஒரு வேலை; நல்ல வேலை பெரிய சம்பளத்துடன் கிடைக்க வேணும் என்று நானும் கையெடுத்துக் கும்பிட்டேன். அப்பு, அம்மா, தங்கச்சிமார், தம்பிமார் எல்லோரும் அன்று எனக்காகக் கும்பிட்டார்கள்.

அன்று நான் பட்டதாரி என்ற பெருமையோடு நிமிர்ந்து நடந்தேன். எனக்கு பெரிய ஒரு வேலை கிடைக்கும்; என் படிப்புக்குத் தகுந்த வேலை கிடைக்காமலா போய் விடும்?

எனது வாழ்க்கையில் பாதிக் காலம் - ஐம்பது வயதுக்கு மேல் வாழ்வது நிச்சயமா? நான் பாதிக்குக் கூடிய காலம் என்பேன்; படிப்பில் செலவழிக்க வைத்த அரசாங்கம் வேலை தராமலா போய்விடும்?

வேலை கிடைக்கும்; வேலை கிடைக்கும்!

கிடைத்ததும்—?

''க்கும்-க்கும்-ப்பு... தம்பி'' அப்பு இருமுகிறார்.

''ஓய்... என்னப்பு?''

''சாப்பிட்டியா?''

''ஓம்''

அப்பு இப்பத்தான் சாப்பிடப் போகிறார். என்னிலை அவ்வளவு அக்கறை!

வேலை கிடைத்ததும் முதலில் அப்பு என் படிப்புக்காக ஈடு வைத்த காணியை மீள வேணும். இரண்டு மூன்று வருஷத்தில் மீளாவிட்டால் எமது சோறும் போச்சு. தங்கச்சிக்கு சீதனமும் இல்லை.

அம்மாவின் விற்ற நகைகள், ஈடுவைத்திருக்கிற நகைகளையெல்லாம் வாங்கிக் கொடுக்க வேணும். மூத்த தங்கச்சி நிர்மலாவுக்கு சீதனம் கொடுத்து நல்ல இடத்தில் கலியாணம் செய்து வைக்க வேணும் இவற்றையெல்லாம் செய்து என் அப்புவையும், அம்மாவையும் மனம் குளிரச் சிரிக்க வைக்க வேணும் என்றெல்லாம் எண்ணியிருந்தேன்.

பட்டதாரியாகி ஏழு வருடங்கள் ஆகி விட்டன. ஒரு மண்ணுங்கட்டியும் நடக்கவில்லை. என் தலைமயிர் எல்லாம் கொட்டிண்டு போச்சு.

எல்லாக் கடமைகளையும் செய்து முடித்துவிட்டு, நானும் திருமணம் செய்ய வேண்டுமென எண்ணியிருந்தேன். முன்பு மாப்பிள்ளை கேட்டு பலர் ஓடி ஓடி வந்தார்கள். இப்ப ஒருவரும் வருவதாகத் தெரியவில்லை.

இதற்குள்ளே எனக்கொரு காதலி! எனக்கே சிரிப்பு. எனக்கு வேலை கிடைக்கு மட்டும் காத்துக் கொண்டிருப்பாளா? இது என்ன சிலப்பதிகாரக் காலமா?

நான் காதல் கீதல் ஒன்றும் வேண்டாம் என்று தான் இருந்தேன். நான் சர்வகலாசாலையிருந்து வந்த பின் அவளாகவே காதலித்தாள்.

ச்சீ... அவளைப் பற்றி யோசிச்சு என்ன பயன்? போகட்டும்.

என் காதல் தோல்வியை ஒரு கதையாக எழுதுவமா? இதுவும் ஒரு கதையா? இப்படி எத்தனை கதைகள்! இதை எழுத எழுத்தாளர் ஏராளம்.

அவள் ஒரு ஒப்பீசரை திருமணம் செய்து நன்றாக வாழ்கிறாள். வாழட்டும்; நான் இருக்கிறேன்! வயது தான் போய்விட்டது; பரவாயில்லை; யாருக்குத்தான் வயது நிற்குது?

முப்பத்திரெண்டு வயது தாண்டிவிட்டதே! பிறகென்ன?

ஓ!... தலைமயிரும் நரைக்கத் தொடங்கி விட்டது. இப்ப சின்ன வயதிலும் நரைக்கிறது தானே?

எனக்கு வயது போய்த் தானே நரைக்குது? இதில் இப்ப என்ன? இது ஒரு கவலையா! மனிதனுக்கு எத்தனை கவலைகள்?

என் வாழ்வின் வசந்தகாலம் முழுவதையும் முப்பது வருடங்களுக்கு மேல்-படிப்பிலும் வேலை கிடைக்கும், கிடைக்கும் என்ற ஏமாற்றத்திலும் ஏங்கி ஏங்கி கழித்துவிட்டேன்.

என்னை நம்பினவர்கள் எல்லாம், என்னை விரக்தியோடும், நம்பிக்கையீனத்தோடும், அனுதாபத்தோடும் பார்க்க இன்னும் நடுத்தெருவில் நிற்கின்றேனே!

நானா நிற்கிறேன்? அரசாங்கம் நிற்கச் சொல்கிறதா? இந்த ஏழு வருடங்களில் தான் போகாத 'இண்டர்வியூக்கள்' இல்லை. எடுக்காத அரசாங்கப்பரீட்சைகள் இல்லை.

நான் ஒன்றிலும் ஈடுபடவில்லை. நான் என்ன மக்குவா?

கொழும்புக்கு அடிக்கடி போக, கடிதங்கள் றெஜிஸ்ட்டர் பண்ண அப்பு பணம் தந்துதந்து சலிச்சுப் போனார்.

''உனக்கு வேலை கிடைக்கிறதுக்குள்ளை நீ எங்களைப் பட்டமரமாக்கி விடுவாய் போலிருக்கு'' என்று அம்மா சொன்னா. சொல்லுவா தானே:

என்னோடு படித்த எத்தனையோ பேர் பெரிய பெரிய வேலையில் இருக்கிறார்கள். ஓ! அவர்கள் பெரிய புள்ளிகளின் பிள்ளைகள்! எனக்குச் சிபாரிசு செய்ய யாரும் இல்லை, என் அப்புவைத் தவிர. எங்கள் எம். பி. என் அப்புவுக்கு ''சிவசம்பு! நீங்கள் பயப்பட வேண்டாம். மகனுக்கு நான் வேலை எடுத்துக் கொடுப்பேன்" என்றுகூறினார். இது வோட்டுக்கேட்க வரும் போது. இப்போ அவரை சந்திக்க முடியவில்லை, அப்புவும் அலைகிறார்.

இப்போ என்னைக் குற்றம் சொல்லத் தொடங்கி விட்டார்கள். எப்படி? 'ஆட்ஸ்' படித்ததால் வேலையில்லையாம்.

அரசாங்கம் தந்த படிப்பைத் தானே படித்தேன். இருபத்தைந்து வருஷத்தை வீணே செலவழிக்க எனக்கென்ன மூளைக் கோளாறு?

'ஆட்ஸ்' படித்தால் வேலை இல்லையென்று இப்பவா, எனக்கு முப்பது வயது கடந்து விட்டபிறகா கூற வேண்டும்?

இப்போ 'சயன்ஸ்' படித்தாலும் வேலையில்லை; 'இன்ஜினியரிங்' படித்தாலும் வேலை இல்லை என்கிறார்கள்.

இதற்கென்ன காரணம்? படிக்கிற படிப்பா? திட்டமிட்ட முதலாளித்துவ சமூகப் பொருளாதார அமைப்பா? இவர்கள் யாரை ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

இப்பத் தான் எனக்கு எல்லாம் வெளிக்கிறது!

சர்வகலாசாலையில் எனது 'றூம் மேட்'டாக சண்முகம் இருந்தான். அவன் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் முன்னணியில் நிற்பான். அவன் ஒரு மலைநாட்டுத் தொழிலாளியின் மகன். அவன் சர்வகலாசாலையில் படித்து முடித்து வெளியேறியது பெரும் அதிசயம். அவன் பணத்துக்காக படாத கஷ்டமெல்லாம் பட்டான். மூன்று வருஷத்திலும் இரண்டே இரண்டு 'லோங்ஸ்' தான் வைத்திருந்தான். அவன் சொன்னான்:

''நாதன்! நீ ஒரு விவசாயியின் மகன். அதுவும் யாழ்ப்பாணத்திலே ஒரு துண்டு நிலத்தை வைத்து, அதிலே மாடாகப் பாடுபடுகின்ற ஏழை விவசாயியின் மகன். நீ இந்த சமுதாயத்தை நம்பிக்கையோடு எதிர்பாராதே! இது முதலாளித்துவ சமுதாய அமைப்பு. இந்த அமைப்பில் சொத்துள்ளவர்களுக்குத் தான் எல்லாம். என் ஆட்சி அதிகாரமே அவர்கள் கையில் தான். தேயிலைத் தோட்டங்களைப் பார்; அங்கு மாடாக உழைக்கின்ற பத்து இலட்சத்

துக்கு மேற்பட்ட தொழிலாளிகளின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் யார்? தோட்ட முதலாளிகளே! அங்கு உழைக்கின்ற தொழிலாளி வர்க்கத்திற்கு கிடைப்பது அழுகையும், துன்பமும், நெருக்கடியும், பசியும் பட்டினியும்; ஆனால் அவர்களைச் சுரண்டுகின்ற முதலாளிகளுக்குக் கிடைப்பதோ, சகல சுக போகங்களும் வசதிகளும் இந்த நாட்டில் உள்ள எண்பது வீதமான மக்களிடம் ஒரு துண்டு நிலமுமில்லை என்று நீ படித்திருக்கின்றாய். இவர்கள் எங்கே உழைக்கின்றார்கள்? நிலமெல்லாவற்றையும் சொந்தமாக்கிக் கொண்ட நிலவுடமையாளர்களிடந் தானே! நிலவுடமையாளர்கள் அவர்களின் உழைப்பைச் சுரண்டுகிறார்கள். இந்த நாட்டைக் கொள்ளையடித்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்ட கல்வி முறை தானே இன்னும் இங்கே இருக்கிறது. அது ஏன் இன்னும் இருக்கிறது? அது சொத்துள்ள வர்க்கத்திற்கு மிகச் சாதகமானது. வேலை இல்லாத் திண்டாட்டம் இந்த அமைப்பின் பிரிக்க முடியாத நோய். இந்த நோய்க்கு ஆளாகி அவதியுறுவது இந்த நாட்டின் தொழிலாளி வர்க்கத்தினரும், விவசாயிகளும் அவர்களின் பிள்ளைகளும் தான். எந்த முதலாளியின் பிள்ளை?, எந்த நிலவுடமையாளனின் பிள்ளை?, எந்தப் பெரும் வியாபாரியின் பிள்ளை? வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றான். ஒரு உதாரணம் கூற முடியுமா? ஆனால் தொழிலாளியின் பிள்ளை, விவசாயின் பிள்ளை வேலை இல்லாமல் அலைவதற்கு இலட்சக் கணக்கில் கூறலாம். ஏன் இன்னும் ஒரு வருடத்தில் நீயும் நானும்... இந்த ஓரவஞ்சகமான முதலாளித்துவ சமூக அமைப்பில் தொழிலாளி, விவசாயி மக்களுக்கு என்றும் பிரச்சனை தான்; நெருக்கடி தான்."

சண்முகம் எனக்கு இப்போ முன்னால் இருப்பது போல இருக்கிறது. அவனும் வேலை இல்லாமல் இருக்கின்றான்.

ஆம்! அவன் சொன்னதில் உண்மை இருக்கிறது இலங்கையில் இப்போது உள்ளது, முதலாளித்துவ சமூக அமைப்புத் தான். இதன் பிரதான அம்சம் சுரண்டல் தான்.

முதலாளிகளும், நிலவுடமையாளர்களும் மட்டும் சுரண்டவில்லை. தொழிலாளியும், விவசாயியும் தங்களுக்குக் கிடைத்த கூலியைக் கொண்டு கடைக்குப் போனால், வியாபாரிகள் லாபம் அடிக்கிறார்கள். நிலவுடமையாளர் குத்தகை பறிக்கிறார்கள். அலுவலங்களில் ஏதாவது வேலை செய்யப் போனால் உத்தியோகத்தருக்கு 'சந்தோஷம்' கொடுக்க வேணும். பிள்ளைக்கு உத்தியோகம் கேட்டால் அரசியல்வாதி ஆயிரக்கணக்கில் லஞ்சம் கேட்கிறான். பிள்ளையைப் பாடசாலையில் சேர்க்கப் போனால் அங்கும் பணம் தேவை. இப்படி எங்கெங்கெல்லாம் பணம் பறிக்கப்படுகிறது?

இவையெல்லாம் என்ன. சுரண்டல் தானே? இந்த முதலாளித்துவ சமூக அமைப்பின் தன்மை தானே? இல்லையா?

எனக்கு மலக்கியாசை நினைக்க மனவருத்தமாக இருக்கிறது. அவன் சுன்னாகத்தில் இருக்கிறான். படு ஏழை. ஆரோ ஒரு பெரிய அதிகாரத்தில் இருந்த அரசியல்வாதி ஆசிரியர் வேலை தருவதாக மூவாயிரம் வாங்கினானாம். அவன் நம்பிக் கடன்பட்டுக் கொடுத்தான். இப்போ பணமுமில்லை; வேலையுமில்லை. கடன்காரர்களுக்கு ஒளித்து திரிகின்றான்.

என் அப்புவை எத்தனை பேர் ஏமாற்றினார்கள். ஏன் நானே வாழைக்குலையும், மாம்பழமும் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறேன். எல்லாரும் ஏமாற்றிப் போட்டாங்கள், கள்ள வேசைமக்கள்!

அப்பு என்ன செய்வார்? அது கிடந்து இருமுது. இருமல் தானே வரும். ஓயாத உழைப்பு. தன் பிள்ளைகளையெல்லாம் நல்ல நிலையில் வைத்து விட்டுக் கண் மூடிவிட வேணுமென்ற எண்ணம் அறுபது வயது தாண்டியும் அதில் கொஞ்சமும் நிறைவேறவில்லை. இப்போது அதுக்கு நித்திரையும் இல்லை. ஓயாமல் உழைத்தென்ன?

எனக்கு நிச்சயமாகத் தெரியும். நிம்மதியின்றித்தான் சாவார்!

மூத்த மகனுக்கு – நான் தான் – தன் சொத்து,

உழைப்பு, சுகம் அத்தனையும்- ஒரு நல்ல வேட்டி உடுத்தியிருக்க மாட்டார் - எல்லாம் செலவழித்தும் உருப்படியாகாத நிலை.

சிவசம்புவின் மகன் பட்டதாரி, என்ற ஒரு திருப்தி. இதில் என்ன திருப்தி? மண்ணாங்கட்டி! பட்டதாரியாம். இது யாருடைய பிழை? படிப்பித்த அப்புவின் பிழையா! படித்த என் பிழையா? நாம் இருவரும் என்ன பிழை செய்தோம்?

அப்பு என்னை எவ்வளவு பக்குவமாகப் படிப்பித்தார். படிக்கிற காலத்தில் சின்ன வயதில் இருந்து எங்கும் வெளியில் போக விட மாட்டார். யாருடனும் கூடவும் விட மாட்டார். மாலை ஆறு மணிக்கு வீட்டில் நிற்க வேணும். ஆறு மணிக்கு பிந்திப் போனால், அப்புவுடன் அம்மாவும் சேர்ந்து நின்றுகொண்டு, இரண்டு பேருமா அடிப்பார்கள்; ஏத்துவார்கள்.

விளையாடவும் விட மாட்டார்கள்; படி படி என்று நிற்பார்கள். தப்பித்தவறி அரசியல் கூட்டங்கள் எதற்கும் போனால் போச்சு! அன்று முழுக்க அப்பு புறுபுறுப்பார்; குறுக்காலை போகாதே என்று எச்சரிப்பார். இப்ப அரசாங்கம் என்ன சொல்லுது? மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்று தானே? அப்பு அப்படித்தான் சரியா என்னை வளர்த்தார்.

நான் ஒழுங்காக வளர்ந்து ஒழுங்காகப், படித்தேன். எனக்கு என்ன கிடைத்தது? என் தம்பி ஜீ. சி. ஈ. பாஸ் பண்ணி பல வருடங்கள் ஆகின்றன. அவனுக்கு என்ன கிடைத்தது?

இப்ப அவன் ஒருவருக்கும் அடங்காமல் ரோட்டளக்கிறான்: இந்தா இன்னும் வீட்டுக்கு வரவில்லை. இரவு பதினொரு மணி ஆகிறது அப்புவை எப்படி குற்றம் சொல்வது? இப்ப எப்போதும் தலை குனிந்து நடக்குது. யோசனை அதிகம். துன்பம் அதிகம் அம்மாவுக்கு அதிலும் பார்க்க. தன் பிரச்சினைகள் தன் பிள்ளைகளுக்கும் வரக்கூடாது என்பது அப்பன் நினைப்பு! நல்ல அப்பன்; நல்ல அம்மா.

இரண்டு பேரும் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்க்கபடாத பாடு படுகினம். அவர்கள் தலை எடுக்க வழியில்லை. தீராத பிரச்சினைகள் பெரிதாக வருகின்றன. அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இப்ப வீட்டுக்கு சோறு போடுவதே பெரிய பிரச்சினை.

விலைவாசி மேலே, மேலே ஏறிப் போகுது. அரசாங்கத்துக்கு கட்சிகள் மாறி மாறி வருகின்றன. விலைவாசி மட்டுமா சகல பிரச்சினைகளும் ஏறி ஏறிப் போகின்றன.

கட்சிகள் மாறி என்ன? ஆட்கள் மாறியென்ன?

சமூக அமைப்பு மாறவில்லை; மாற்றப்படவில்லை.

நான் நினைப்பது பிழையா? எனக்குப் பிழையாகத் தெரியவில்லை. வீட்டில் சாப்பாடு இப்ப அப்படியும், இப்படியும் தான். முன்பிருந்ததை விட நான் மெலிந்துவிட்டேன். குடும்பத்தில் எல்லாருந்தான். என் மூத்த தங்கச்சியின் பெருமூச்சு கேட்குது; அவளுக்கு இன்னும் நித்திரை வரவில்லையோ?

அது ஒரு நல்ல பிறவி; அவளுக்கும் இருபத்தெட்டு வயசாகின்றது. வாழ்க்கையில் எந்தச் சுகத்தையும் அறியாள். நல்ல சேலை உடுத்து அறியாள். நல்லாகப் படித்தாள். அண்ணன் படிக்கட்டும் என்று அவளை அப்பு ஒன்பதாம் வகுப்போடு நிற்பாட்டி விட்டார். அண்ணன் படித்து முடிக்கட்டும்; நல்ல சேலை உடுத்தலாம் என்றாள். நானும் தங்கச்சிக்கு விதம் விதமான சேலைகள் வாங்கித் தருவேன் என்று புழுகித் தள்ளினேன்.

ஐந்து சதம், பத்து சதமாக சேர்த்து வைத்திருந்து இப்ப எனக்கு முடி வெட்ட அவள் தான் காசு தருவாள். நினைக்க எவ்வளவு வேதனையாக இருக்கிறது!

போன மாதம் அவளுடைய தோட்டை அடைவு வைத்துத்தான் கொழும்புக்கு இன்டர்வியூ ஒன்றுக்குப் போய் வந்தேன்.

அவளுக்கு திருமணம் செய்து வைக்க வேணும். ஆசை தான்; நடக்குமா?

அவள் எவ்வள்வு அழகாக இருந்தாள். இப்போது ? அவளுடைய உடலில், முகத்தில் இருந்த தளதளப்பு எல்லாம்

கொட்டுண்டு கண் பள்ளம் விழுந்து, மெலிந்து பல்லும் மிதந்து விட்டது. சும்மா கிடக்கிறளே என்று இயற்கை அவளைத் தின்று விட்டதோ?

மற்றவளும் பெரிசாகி இரண்டு வருடம் ஆகுது; சின்னவளும் பெரிசாகப் போகிறாள்.

அப்புவுக்குப் பிறகு எல்லாம் என் பொறுப்புக்கள் தான். மூத்தவளுககுத் திருமணம் செய்வதென்றலே—

—வீடு, வளவு வேணும்; நகை நட்டு வேணுய்; மாப்பிளளை வீட்டாருக்கு கொடுக்க நன்கொடைப் பணம் குறைந்தது ஐயாயிரம் வேணும. இவ்வளவும் இருந்தால தான் திருமணம் பேசுவதை யோசிக்கலாம். இவ்வளவும் இல்லைய! அதனலே தான் தங்கச்சி இருபத்தெட்டு வயதுக் குமரி!

இவை மட்டும் போதுமா?

சாதி பார்க்க வேணுய்; சாதகப் பொருத்தம் பார்க்க வேணும்; குடுமபப் பரம்பரை; கெளரவம்; மாப்பிள்ளை 'பீடி சிகரெட்' புகைப்பவரா,

ஐயோ! இது அசிங்கமான சமுதாயம்!

என் பெரியப்பாவின் மகள் முப்பது வயது மட்டும் இருந்தாள். கலியாணம் நடக்கவில்லை. கடைசியில் வளவில் கள்ளுச் சீவ வருகிற நளவனேடு ஓடி விட்டாள். எங்கே? வாழ்வதற்கு.

அடுத்த கிழமை அவனை அடித்து சந்தி ஆலமரத்திலே தூக்கிவிட்டு, ஓடினவளை வீட்டில் கூட்டிக் கொண்டு வந்து வைத்திருக்கிறர்கள்.

இவையெல்லாம் யாழ்ப்பாணத் தமிழர் மரபுகள்!

எங்கள் வீட்டில் மட்டுமில்லை; ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மூன்று குமர்கள் பெருமூச்சு விட்டபடி தான் இருக்கும். முப்பது, முப்பத்தைந்து, நாற்பது வயதுகளில் குமர்கள்! இவர்கள் குமர்கள் இல்லையா?

ஏன் இந்த நிலைமை?

யாழ்ப்பாணத்தில் ஆண்கள் இல்லையா?

ஓ...! தாராளம் பேர். இதே வயதுகளில் பொறுப்புக்கள் என்று அழுது கொண்டு பிரமச்சாரிகளாக இருக்கிறர்கள்!

இவர்களை வாழவிடாமல் கன்னியாஸ்திரி வாழ்க்கையும், சுவாமி வாழ்க்கையும் வாழும்படி நிர்ப்பந்திப்பது என்ன?

இந்தச் சமுதாயத் தடைச் சுவர்களே! அவர்கள் இந்தச் சுவர்களுக்குள்ளே சிறையாகக் கிடக்கிறர்கள். இந்தத் தடைச் சுவர்கள் மிகப் பலமானவை! இவை சொத்துடமை நிலப்பிரபுத்துவச் சமுதாயத்தில் அத்திவாரம் கொண்டுள்ளன. மனித உணர்வுகள், வாழ்க்கைத் துடிப்புகள், இன்பங்கள் என்பனவற்றை விட நிலத்துக்கும், சொத்துக்கும் முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்கிற நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமூக அமைப்பு இந் நாட்டில் இருக்கும் வரை இப்படியான அவலங்கோலங்கள் தான் தொடரும்.

பெண்கள் தனிமையில் பெருமூச்சு விட்டுக் கொண்டுதான் இருப்பார்கள்!

சண்முகம் நீ சொன்னவை சரியடா!

இப்போது யாழ்ப்பாணத்தில் தாசிகள் கூட்டம் அதிகமாம். அதிகரிக்காமல் என்ன செய்யும்? பெண்கள் எவ்வளவு காலத்துக்கு கட்டுப்பாடுகளுக்கு மதிப்புக் கொடுத்துக் கொண்டு, உணர்வுகளாலும், வயிற்றுப் பசியினலும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

இந்தச் சமுதாய அமைப்பு, தாசிகளை மட்டுமல்ல, கள்ளர்களை, ஏமாற்றுகாரர்களை, பொய்யர்களை, தறுதலைகளை, காட்டுவாடிகளை, கொலையாளிகளைத் தானே உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றது

இது மக்களுக்கு எதுவிதத்திலும் பொருத்தமில்லாத அமைப்புத் தானே?



ஆசிரியர்:
அடே ராமு
விஷத்திற்கும் விலை
வாசிக்கும்
உள்ள
ஒற்றுமை
வேற்றுமை
என்ன?



ராமு:
விஷமும் ஏறும்;
விலைவாசியும்
ஏறும். விஷம்
இறங்கும்
ஆனல் விலைவாசி
இறங்காது.

பொருத்தமானதா? இந்த அமைப்பு இன்னும் இருக்க வேண்டுமா?

நான் என்றால் இந்த அநீதியான, அசிங்கமான சமூக அமைப்பு அழிக்கப்பட வேண்டும் என்று தான் சொல்வேன்!

இதை என் அம்மாவிடம் சொன்னால் கேட்பாவா?

அதுக்கென்ன விளங்கப் போகுது. அதுக்கு தன் பிள்ளைகள் நல்லாக வாழவேணும். இதைவிட வேறு நினைக்கத் தெரியாது.

எனக்கு வேலை கிடைக்க வேணும்; தங்கச்சிக்கு திருமணம் நடக்க வேணும் என்று அது கும்பிடாத கோயில்கள் இல்லை. கொழுத்தாத கற்பூரங்களும் இல்லை. கும்பிடும் போது கண்கள் கண்ணீரைச் சொரிந்து கொண்டிருக்கும்.

எனக்கென்றால் கடவுள் நம்பிக்கை அற்றுப் போச்சு. என்னைப் பொறுத்தவரையில் கடவுள் இல்லை. நான் ஆழமாக யோசிக்கிறேன். எனக்குத் தெரியும்; பரம்பரை பரம்பரையாக வறுமைகளாக இருப்பவர்கள் மேலும் மேலும் மோசமான ஏழைகளாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஏழைகளின் புதிய பரம்பரை, வாழ்வின் அதள பாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதே போது முன்னைய பரம்பரைகளில் சொத்துப்பத்தோடு சுகமாக வாழ்ந்தவர்களின் புதிய பரம்பரை, மேலும் மேலும் சொத்துக்களைப் பெருக்கி சுகயோகத்தில் வாழ்கிறார்கள்.

மக்களில் ஒரு பெரும் பகுதியினரை பரம்பரை பரம்பரையாக ஏழைகளாக்கி துன்பத்தையும், அழுகையையும், கஷ்டங்களையும் அனுபவிக்க விடுவதும், ஒரு சிறு கூட்டத்தினரை பரம்பரை பரம்பரையாக இன்பத்துக்கும், சுக போகத்திற்கும் உரிமையாளர் ஆக்குவதும் கடவுளின் வேலையா?

இருக்கிற கடவுளை நான் இல்லையென்று கூறவில்லை.

நம்பச் சொல்லுகிற கடவுளைத் தான் என்னால் நம்ப முடியவில்லை. கடவுளை நம்பச் சொல்ல இவர்கள் யார்?

அளவு கடந்த இரக்கமும், எல்லையற்ற அன்பும் உள்ள கடவுளிடம் ஏழையின் மகனாகிய நான் நீதியைத் தேடுகின்றேன். நான் அறிந்த வகையில் இந்த சமுதாயத்தில் நீதியைக் காணோம்; 'கடவுள் ஏழைகளை நேசிக்கிறார்; ஆனால் பணக்காரர்களுக்கு உதவி செய்கிறார்' என்று ஒரு யூதப் பழமொழி எங்கோ படித்த ஞாபகம். இது உண்மையாக இருக்குமோ?

சொத்துள்ளவர்களுக்கு சுகம்.

சொத்தில்லாதவர்களுக்கு அழுகையும், பற்கடிப்பும்.

இது இந்த முதலாளித்துவ சமுதாயத்தின் விதி. இதைக் கடவுள் விதித்த விதி என்றால் நான் நம்ப முடியுமா?

எல்லாவற்றையும் யோசிக்க யோசிக்க எனக்கு மனம் புழுங்குது. தலை இடிக்கிறது. எல்லாம் இருளாக இருக்கிறது.

எதிர்காலத்தில் ஒரு வெளிச்சமும் தெரியவில்லை.

எங்கள் பிரச்சினைகள் எல்லாம் தீரும். உனக்கு ஆறுதல் கிடைக்கும் என்று அப்புவுக்கு கூற எனக்கு ஒரு தைரியம் இல்லை. வீட்டில் எல்லாரும் தியாகம் செய்து என்னை மெத்தப் படித்தவனுக்கி விட்டுள்ளார்கள்.

நான் ஆளாகி அவர்களையெல்லாம் உருப்படியாக்குவனும்!

எனக்கு ஏன் இத்தனை பொறுப்புகள்?

அவர்களுக்கு நான் என்ன செய்யப் போகிறேன்.

அப்புவைப் பிடித்த பிரச்சினைகள் என்னையும் விட்டபாடில்லை. பிள்ளைகளையும் சிக்காராகப் பிடித்துக் கொண்டது. இனிச் சாகும்வரை விடுதலை இல்லையோ?

''அப்பனே முருகா! என் பிள்ளைகளுக்கு வழி விடு!''

அம்மா இன்னும் நித்திரை கொள்ளவில்லை. எப்படி வரும் நித்திரை?

''தம்பி!''

என்னைக் கூப்பிடுகிறா.

''என்னம்மா?''

''நீ இன்னும் நித்திரை கொள்ளேல்லையே?''

''நான் படித்துக் கொண்டிருக்கிறேன்.''

படிக்கிறதெண்டால் சரி; அம்மாவுக்கு சந்தோஷம் தான்.

''தம்பி! இவன் செல்வத்தை இன்னும் காணேல்லையடா''

''அவன் வருவான் நீங்கள் படுங்கோ; அவன் படத்துக்குப் போயிருப்பான்.''

அவன் ஊரில் உள்ள பொடியன்களோடு இப்படித்தான் திரிவான். அவன் மட்டுமா இப்படி அலைகிறான். அவனைப் போல படித்த வாலிபர்கள் வேலையின்றி நாடு முழுவதும் இலட்சக் கணக்கில் அலைகிறார்களே!

அவனை நான் எப்படிக் குற்றம் சொல்வது!

ஏன் மக்களுக்கு இவ்வளவு தொல்லைகள் மனவேதனைகள்?

நான் வாழ்கின்ற நாடு ஒரு ஜனநாயக நாடு! அப்படியா? வேறென்ன? இங்கு ஒவ்வொருவருக்கும் தனிமனித சுதந்திரம உண்டு. ஆம் உண்டு! உண்டு!!

தனக்குத்தானே வேலை தேடிக்கொள்ளவேணும்; இருக்க இடம் தேடிக்கொள்ளவேணும்; வீடு கட்டிக்கொள்ளவேணும்; பிள்ளைகளைப் பெறவேணும்; அவர்களுக்குத் தேவையான சகலதும் கொடுத்து வளர்க்கவேணும்; படிப்பிக்கவேணும்; பள்ளிக்கூடம் தேடிக்கொள்ளவேணும்.

படித்து முடித்தால் வேலை. அதுவும் தேடிக்கொடுக்கவேணும்.

பெண் பிள்ளையா? அதற்கு திருமணம் செய்து வைக்கவேணும்.

பிள்ளைகளின் முன்னேற்றத்தையிட்டு கவலைப்படவேணும்.

இவற்றை உன்னால் சரிவர நிறைவேற்ற முடியவில்லையா?

இவையெல்லாம் பெரும் தொல்லைகளாக இருக்கிறதா?

இது உன் சொந்த விஷயம்; உன் தனிமனித சுதந்திரம். இதில் யாரும் தலையிடமாட்டார்கள். அரசாங்கமும் தான்! ஒவ்வொருவருக்கும் இதில் அனுபவமிருக்கும்.

என் நண்பன் ஒருவனின் அக்காவுக்கு மூன்று பெண் பிள்ளைகள். கணவன் கூலி வேலை செய்து கொண்டிருந்தான். திடீரெனச் செத்துவிட்டான். அவர்களுக்கு சொந்த நிலமில்லை. வீடு இல்லை. வாழ வேறொரு வழியும் இல்லை. மூன்று பெண் பிள்ளைகளும் படித்துள்ளார்கள். அந்தத் தாய் மூன்று பிள்ளைகளோடு வாழ்வதற்கு படாத கஷ்டமெல்லாம் படுகுது.

சொந்தக்காரர் எவ்வளவுக்கு உதவி செய்வார்கள்? யாழ்ப்பாணத்தில் பெண்கள் வேலை செய்வதற்கு என்ன வசதி உண்டு? கடைசியாக அந்த மனுஷி தன் கஷ்டமெல்லாம் எழுதி, அரசாங்கத்திடம் உதவி செய்யும்படி, தன் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்கும்படி கேட்டிருந்தாள்.

அரசாங்கத்திடம் இருந்து ஒரு பதிலும் இல்லை.

''தம்பி அரசாங்கம் எமக்கு வாழ்வு அளிக்காதா?'' என்று என்னை அந்த மனுஷி ஒரு நாள் கேட்டுது. நான் படித்தவனில்லையா?

நான் என்ன பதில் சொல்வேன்?

''இன்னம் கொஞ்சம் நாள் பாத்திட்டு நாங்கள் ஆத்தில குளத்தில விழுந்து சாகவேண்டியது தான்'' என்று என்னிடம் கண் கலங்கிக் கூறினாள் அந்தத் தாய். இதென்ன? இப்படி எத்தனை கேஸுகள்!

அது சரி; அவனுக்கு தனி மனித சுதந்திரம் உண்டு.

என் அப்பனுக்கும் தனி மனித சுதந்திரம் நூறு வீதம்.

அதனால் தான் எல்லாச் சுமையும் அவர் தலையில்!

சுமையை ஏற்றுவது இந்த சமுதாயம். சுமக்க வேண்டியது அவன்; சுமையை இறக்க வேண்டியதும் அவனே. இறக்க முடியாவிட்டால் சுமையோடு சாக வேண்டியதும் அவனே!

இப்படி ஒவ்வொருவன் தலையிலும் சுமை ஏற்றப்படுவதால் தான் ஒவ்வொருத்தனும் படு சுயநலவாதியாகிவிடுகிறான். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இலங்கை, மனிதர்கள் கூடி வாழும் ஒரு சமூகம் போல தோற்றுகிறது.

ஆனால் உள்ளே,

தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு, தன் குடும்பம், தன் சொத்து என்று எல்லாம் தனக்கு என்ற சுயநலத்தோடு இயங்கும். ஒருவனோடு ஒருவன் போட்டி போடும் தனி மனிதர்களின் கூட்டம்.

சிரித்துப் பேசினாலும், இரகசியமாக ஒருவன் ஒருவனுக்கு எதிரிதான், அதனால்

உறவு எல்லாம் பொய்; அன்பெல்லாம் பொய்! இல்லையா? தனிச் சொத்துடமை முதலாளித்துவ சமூக அமைப்பு உருவாக்குவது சுயநலமுள்ள மனிதர்களைத் தான்.

ஐயகோ! பலவழிகளிலும் இந்த முதலாளித்துவ சமுதாயம் —

அசிங்கம்! அசிங்கம்!! அசிங்கம்!!!

என்னை இந்த நிலைக்கு ஆளாக்குகின்ற,

என் சகோதரிகளை வாழ விடாது தடைச்சுவர்கள் எழுப்புகின்ற,

என் தம்பிமாரை உருப்படி இல்லாதவர்கள் ஆக்குகின்ற,

என் அப்புவையும், அம்மாவையும், நிம்மதியின்றி உருக்குலைக்கின்ற, இந்த கேடுகெட்ட சமுதாய அமைப்பை,

ஏழை விவசாயியின் மகனாகிய நான் —

வெறுக்கின்றேன்!

வெறுக்கின்றேன்!!

வெறுக்கின்றேன்!!!

என் அப்பனுக்கே இப்படியென்றால்?

நான் திருமணம் செய்து பிள்ளை குட்டிகள் பெற்று வாழமுற்பட்டால், அப்பனுக்குச் செய்தது போலத்தானே என் தலைமேலும் சுமைகளைச் சுமத்திவிடும். என் காலத்தில் அச்சுமை இன்னும் பாரமாக இருக்கும். என்தாயே! இந்தச் சமூக அமைப்பும், இதன் கேடுகளும் என் அப்பனோடு அழியட்டும்!

என்னால் அப்படி வாழ முடியாது.

ஐயோ! என்னால் வாழ முடியாது.

எனக்கு ஒரு மகன் பிறந்து அவனும் இப்படித்தானே சுமைதூக்கி வாழவேண்டும்!

சுயநலவாதியாக வாழ வேண்டும்!

எனக்குப் பல மக்கள் பிறந்து, அவர்களில் —

ஒருவன் கள்ளனாக,

ஒருவன் ஏமாற்றுக்காரனாக,

ஒருத்தி வேசையாக,

ஒருத்தன் தறுதலையாக வாழும்படி இந்தச்சமுதாயம் நிர்ப்பந்தித்தால்? நிச்சயம் அப்படித்தான் நடக்கும்; நடக்கும்!

ஓ! ஓ! விவசாயிகளின் புத்திரர்களுக்கும், தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கும் விரோதமான-

இந்த ஓரவஞ்சகமான சமூக அமைப்பு-

எமக்கு வேண்டாம்!

வேண்டாம்!!

வேண்டவே வேண்டாம்!!!

நான் சொல்கிறேன், இந்தச் சுரண்டல் சமுதாய அமைப்பை ஒழித்துக் கட்டுவோம்!

ஒழித்துவிட்டு, அந்த மண்ணில் - தாய்த்திருநாடாகிய இலங்கையில் எல்லோருக்கும் வேலை, எல்லோருக்கும் மகிழ்ச்சி, எல்லோருக்கும் நிம்மதி அளிக்கின்ற சுரண்டலற்ற ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைப்போம்!

இப்படி நான் எண்ண எனக்குச் சுதந்திரம் இருக்கிறது! இதை விட வேறு ஏதாவது பேசுகின்ற அரசியல்வாதிகள் பொய் சொல்லுகிறார்கள்! பொய் சொல்லுகிறார்கள்!!

நான் இப்ப யோசித்தவற்றைத் தான் எழுதப் போகின்றேன்.

மக்கள் அறியட்டும்!

இவற்றையெல்லாம் எண்ண, எண்ண மனதுக்கு நிம்மதி இல்லை. எரிந்து புகைக்கிறது. எழுதத்தான் வேணும்.

இப்ப கண்ணைத் தூங்குகிறது; இல்லை இல்லை இப்பவே எழுத வேணும்.

## களத்தில்....!

பன்னல் வழியாகப்
பொழிகிறது அழகு நிலா!

யாத்திடுக ஓர் கவிதை
என்றெனக்குச்
சொல்கிறது!

மின்னல் மனப்
போர்வீரன் நிலைமையிலே
யானுள்ளேன்!

மீதமில்லை நேரமிங்கு
கவியேதும் பாடுதற்கு!

—ஹோ சி மின்

உங்கள் இல்லங்களுக்கு உகந்த உறுதியான
தளபாட வகைகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்!
பலவகைத் தேவைகளுக்குமான
நவீன தளபாட வகைகளும் எங்களிடம் உண்டு.

# யாழ்ப்பாணம் ரேடிங் கொம்பெனி

79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவித உணவு வகைகளுக்கும்
சிறந்த இடம்

## ராஜா ஹோட்டல்

உரிமையாளர்: எஸ். இராசு
கண்டி வீதி,
பரந்தன்.

உள்ளம் மகிழும்
தூய சலவைக்கு
சிறந்த இடம்

## பாண்டியன் லோன்றி

கண்டி வீதி,
பரந்தன்.

களனிக்கு எமது வாழ்த்துக்கள்

நாவலன் பதிப்பகம்
நல்லூர்
யாழ்ப்பாணம்

உங்கள்
ஆங்கில மருந்துத் தேவைகளை
பூர்த்தி செய்ய
இன்றே விஜயம் செய்யுங்கள்

சித்ரா
டிஸ்பென்சரி
கந்தசாமி கோவிலடி,
கிளிநொச்சி

படிக்கத் தவறாதீர்கள்!

சிரித்திரன்
(நகைச்சுவை மாத இதழ்)

அலை
கலை, இலக்கிய, விமர்சன இதழ்

# களனி பிறந்த கதை

கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள நண்பர்கள் சிலர் ஒன்று சேர்ந்து கலை, இலக்கிய, அறிவியல் சஞ்சிகை ஒன்று வெளியிட வேண்டுமென்ற அவா எமக்குள் நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. மனித குலத்தின் விடுதலைக்கு கலையும், இலக்கியமும், அறிவுத் துறையின் சகல அம்சங்களும் ஓர் ஆயுதமாகப் பயன்பட வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்ட நாம், இம்மாதிரியான சஞ்சிகை ஒன்றின் மூலமாக பெரும் தொண்டாற்ற முடியும் என நம்பினேம். வரலாற்றுத் தேவையுடன் இணைந்து நின்ற எமது அவா, சிதைந்து சின்னுபின்னமடையாது படிப்படியாக வளர்ந்து உரம் பெற்றதில் வியப்பில்லை.

இந்த நிலைமையில் தான் பல நண்பர்களின் விடாமுயற்சியினுல் உருவாக்கப்பட்ட கிளிநொச்சி மக்கள் கலாச்சாரப் பேரவை எமது நீண்ட கால ஆவலுக்கு வடிவம் கொடுத்தது. கலாச்சாரப் பேரவையின் முடிவின் படி 'மாவலி' என்ற பெயரில் கலை, இலக்கிய, அறிவியல் காலாண்டுச் சஞ்சிகை ஒன்று வெளியிடுவதென முடிவு செய்து அதற்கான ஆரம்ப, அடிப்படை வேலைகளையும் செய்தோம். 'மாவலி' இதழுக்காக பல மக்கள் எழுத்தாளர்களிடமிருந்து கதை, கவிதை, கட்டுரை துணுக்குகள், விளம்பரம் என்பனவற்றை திரட்டியதுடன், அதற்கான பெயர் புளொக், றேட் மார்க் (Trade Mark), கடிதத் தாள் (Letter Head) என்பனவற்றையும் பல ரூபாய் செலவில் தயாரித்திருந்தோம். மேற்படி சஞ்சிகை வெளிவரும் என்ற செய்தி 'தினகரன்' நாளிதழிலும் வந்திருந்தது.

மேற்படி செய்தி வெளிவந்து கிட்டத்தட்ட ஒரு மாதத்தின் பின்னர், கொழும்பிலிருந்து பழம்பெரும் எழுத்தாளர் சி. வி. வேலுப்பிள்ளை அவர்களை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு 'மாவலி' என்ற பெயரில் மாத சஞ்சிகை ஒன்று வெளி வரத் தொடங்கியுள்ளதாக அறிந்தோம். இச் செய்தி எமக்கு பெரும் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் உண்டு பண்ணியது. எம்மை மாத்திரமின்றி எம்முடைய சஞ்சிகை வெளியீட்டை எதிர்பார்த்திருந்த படைப்பாளிகளுக்கும், நண்பர்களுக்கும், வாசகர்களுக்கும் கூட இச் செய்தி வேதனையையுண்டாக்கியது. தீர்க்கமான ஆலோசனையின் பின்னர் 'மாவலி', 'களனி'யாக விடிந்தது.

இந்த நிலைமையில் பல ரூபாய்கள் நஷ்டத்தை எதிர்நோக்குகின்றேமே என்பதை விட ஒரு நல்ல பெயரை இழந்து விட்டோமே என்ற கவலையே எமக்குள் மேலோங்கி நிற்கிறது. ஏனெனில் மண்வாசனையுடன் கூடிய தேசியவுணர்வையும், மாபெரும் வலிமைமிக்க வர்க்க உணர்வையும் தன்னகத்தே கொண்டு பேரிரைச்சல் செய்த 'மாவலி' போய் விட்டதே என்ற கவலை தான்.

இருந்தும் ஒரு நம்பிக்கை. வலிமைமிக்க தமது எழுத்தின் பலத்தால் பழம்பெரும் எழுத்தாளர் சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் 'மாவலி'யை மக்களுக்குகந்த பொக்கிஷமாக்குவார் என நம்புகின்றேம்.

'களனி'களும், 'மாவலி'களும் எமக்கு நிறையத் தேவை.

அவை எமது மண்ணை வளப்படுத்தும்.

அவை எமது கலாச்சார அறுவடைக்கு களத்தையும், வளத்தையும் வலிமையையும் கொடுப்பன.

களனி பிறந்த கதை இதுவே தான்!

# பார்க்கத்தவறாதீர்கள்!

## நமது மண்ணின் விளைச்சல்!

## நமது கலைஞர்களின் அறுவடை !!

பிரபல நடிகர்கள் ★ ஜெயகாந்த் ★ ராஜலட்சுமி ★ தேவன் அழகக்கோன்
★ எஸ். வி சுப்பையா ★ லீலா ரஞ்சனி

கிளிநொச்சிப் பிரதேசக் கலைஞர்கள்:
★ கே. எஸ். வேலாயுதம் ★ கே. நல்லதம்பி ★ கே. ஆர். ஆறுமுகம் ★ த. நாகேஸ்வரி
★ செல்லையா ★ தனபாலசிங்கம் ★ நவரத்தினராசா ★ சின்னராசா ★ ஜெயம்

மற்றும் பலர் நடித்த



தயாரிப்பு: கே. காதர் மீரா, [முத்தரலிப்]

கதை - வசனம் - டைரக்ஷன் :

**பி. எஸ். கிருஷ்ணகுமார்**

யதார்த்தமான கதையமைப்பு, இனிய பாடல்கள்,
சண்டைக்காட்சிகள், நடனங்கள், சிறந்த வசனங்கள்,
தரமிக்க நடிப்பு எல்லாம் ஒருங்கிணைந்த
உன்னத தமிழ்ச் சித்திரம்.

இப் பத்திரிகை கிளிநொச்சி மக்கள் கலாச்சாரப் பேரவைக்காக முரசுமோட்டையைச் சேர்ந்த க. இராசரத்தினம் அவர்களால் நல்லூர் நாவலன் பதிப்பகத்தில் பதிப்பித்து வெளியிடப்பட்டது